# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டு 6 வருடங்கள்:

# இன்னும் நீதிக்காக காத்திருத்தல்

*சமூக - அரசியல் - பொருளாதார மற்றும் சட்டரீதியான கண்ணோட்டம்*

*சமூக சமய நடுநிலையத்தின்*
*ஆய்வுக்குழு*

## நிறைவேற்றுச் சுருக்கம்

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி மூன்று கிறிஸ்தவ தேவாலயங்கள், மூன்று ஆடம்பர ஹோட்டல்கள், ஒரு விருந்தகம் மற்றும் குடியிருப்பை[1] இலக்குவைத்து நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை, யுத்தத்திற்கு பின்னர் நாட்டில் நடத்தப்பட்ட மிகக் கொடூரமான படுகொலையாக இனங்காணலாம். கடவுள் முன் மண்டியிட்டு பிரார்த்தித்துக் கொண்டிருந்த நூற்றுக்கணக்கான வழிபாட்டாளர்களும், உயிர்த்த ஞாயிறை முன்னிட்டு தமது காலை உணவை இரசித்து உண்டுகொண்டிருந்த பலரது உயிர்களும் கொடூரமாக காவுகொள்ளப்பட்டன. குறிப்பாக, 259*முதல்* 315 *பேர்* வரை கொல்லப்பட்டதாகவும், சுமார் பேர் காயமடைந்ததாகவும் நம்பப்படுகிறது 600. எனினும், எத்தனை பேர் பாதிக்கப்பட்டனர் என்ற சரியான விபரம் இல்லை. [2] அவர்களில் 45 குழந்தைகள் மற்றும் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 40 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளும் உயிரிழந்தமையானது, இந்த தாக்குதலின் மீதான சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்தது. தாக்குதலில் இருந்து தப்பியவர்கள் பலர் இன்னும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளைப் பெறுகின்றனர். இந்த கொடூரமான அனுபவத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சிக்குப் பின்னரான மன அழுத்தப் பாதிப்பிற்கு, அவர்களுக்கு ஆலோசனை சேவைகளும் அவசியமாகின்றது. ஈஸ்டர் தாக்குதல் படுகொலையின் இருள் இலங்கையின் வரலாற்றின் ஒரு பகுதியாக எப்போதும் அழியாமல் இருக்கும். தமது அன்புக்குரியவர்களை இழந்த மக்கள் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்ந்துள்ளதோடு, இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பிற்கு நீதி கோரி நிற்கின்றனர். 2024ஆம் ஆண்டு, ஏப்ரல் 21ஆம் திகதி நிலவரப்படி, இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டு 5 வருடங்கள் பூர்த்தியாகின்றன. எனினும், இதற்கான நீதி இன்னும் நிலைநாட்டப்படவில்லை மற்றும் பாதிக்கப்பட்ட அனைவரும் இதற்கான தீர்வை நாடி நிற்கின்றனர்.

தாக்குதல்கள் நடத்தப்பட்ட மறுநாள், சஹ்ரான் ஹாசிம் தலைமையிலான தேசிய தௌஹீத் ஜமாத் என்ற இஸ்லாமியக் குழுவே இதற்கு காரணம் என தாம் நம்புவதாக இலங்கை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.[3] தாக்குதலின் பின்னணியில் உள்ள ஒரு முக்கிய குழுவாக தேசிய தௌஹீத் ஜமாத் இயக்கம் உள்ளதாக நம்பப்படுவதாக, தாக்குதல் நடத்தப்பட்ட வாரத்தின் பிற்பகுதியில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். அத்தோடு,

தாக்குதலில் அவர்கள் பங்களித்துள்ளதாகக் கூறி தேசிய தௌஹீத் ஜமாத் மற்றும் ஜமாத்தே மில்லத்து இப்ராஹிம் ஆகிய அமைப்புகளுக்கு தடைவிதிக்கப்பட்டது.[4] எவ்வாறாயினும், தாக்குதல்களுக்கு காரணமானவர்கள் பற்றி கதைக்கும்போது, இலங்கை அரசின் பாதுகாப்புத் துறையின் தோல்வியின் விளைவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் என்பதை கருத்திற்கொள்ள வேண்டியது அவசியம்[5]. குண்டுவெடிப்பு பற்றிய உண்மை மறைக்கப்படுவதாக கத்தோலிக்க திருச்சபை மற்றும் மனித உரிமை காப்பாளர்கள் உட்பட பலர் கருதுகின்றனர்[6]. தீவிரவாதக் குழுக்களை உளவுப் பிரிவுகள் நீண்ட காலமாக அறிந்திருந்ததாகவும், தேவாலயங்கள் மீது[7] தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து முன்னறிவிப்புகளை பெற்றதாகவும் தகவல்கள் வெளியாகின. உயர் அதிகாரிகளுக்கும் இது தெரியும்[8]. மேலும், இராணுவப் புலனாய்வுப் பிரிவுகளுக்கும் வேறு சில சந்தேக நபர்களுக்கும் இடையிலான விபரிக்க முடியாத தொடர்புகளும் வெளிப்படுத்தப்பட்டன.[9] தாக்குதல்கள் தொடர்பாக அலட்சியப்படுத்தப்பட்ட எச்சரிக்கைகள், தாக்குதல்களை தடையின்றி நடத்தியமை மற்றும் நீதியை வழங்குவதில் அரசாங்கத்தின் மெத்தனமான அணுகுமுறை ஆகியவற்றை பார்க்கும்போது, தாக்குதல்களுக்குப் பின்னால் உண்மையாக செயற்பட்டவர்கள் யார் என்ற கேள்வி எழுகின்றது. அண்மையில் சனல் 4 வெளியிட்ட ஒரு ஆவணப்படமானது, இத்தாக்குதலில் ஒரு மூத்த அதிகாரியின் முக்கியத்துவத்தையும், ராஜபக்ஷ அரசாங்கத்துடனான அவரது தொடர்பையும் எடுத்துக்காட்டுகின்றது. எனினும், அதில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் அவசியமாகின்றது.[10] அந்த நேரத்தில் நாட்டில் நிலவிய அரசியல் ஸ்திரமற்ற தன்மையும், தாக்குதல்களுக்கு பங்களித்திருக்கக்கூடிய மற்றொரு காரணியாகும். அரசியலமைப்புச் சதியின் தோல்வியை தொடர்ந்து அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கும் இடையில் நிலவிய பலவீனமான உறவு, நாட்டின் தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தியதுடன், சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறவும் வழிவகுத்தது.[11] குற்றவாளிகள் சுதந்திரமாக இருக்கும் அதே சந்தர்ப்பத்தில், பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் தொடர்ந்து துன்பத்தை அனுபவிப்பதோடு, அவர்களின் முகங்கள் வெறுமை மற்றும் சோகத்தால் நிரம்பியுள்ளன. தாக்குதல்களின் பின்னணியில் காணப்படும் உண்மையை வெளிக்கொண்டுவர உதவுவதற்காக, நம்பகமான

சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றுவதற்கான முயற்சிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

ஈஸ்டர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை நாடும் போது, இரண்டு இஸ்லாமிய குழுக்களுடன் தொடர்புடைய பல நபர்களை அரசாங்கம் கைது செய்தது. ஆனால், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மாத்திரமே குற்றவியல் அலட்சியத்திற்காக கைது செய்யப்பட்ட அரச அதிகாரிகளாவர். தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உயிர் பிழைத்தவர்களுக்கும் நிதியுதவி வழங்கப்பட்டது. குற்றங்களின் தீவிரம் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் கணிசமான எண்ணிக்கை, பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்கள் ஆகியவற்றின் தீவிரத்தை கருத்திற்கொள்ளும்போது, சித்திரவதைக்கு ஆளானவர்களுக்கு உச்ச நீதிமன்றம் வழங்கிய முந்தைய இழப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், இதற்கு வழங்கப்படும் இழப்பீடு ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதை நாம் அவதானிக்கின்றோம்.[12] இதற்கு மேலதிகமாக, இழப்பீடு வழங்கும் செயற்பாட்டில் பல அரசு சாரா நிறுவனங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. குறிப்பாக, பாதிக்கப்பட்டவர்களின் மருத்துவ தேவைகளுக்கு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய உதவுகின்றன. மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய பல வழக்குகள் நீதிமன்றில் தொடரப்பட்டுள்ளன. சுமார் 35 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள போதிலும், பெரும்பாலான வழக்குகள், விசாரணையின் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன[13]. இந்த[1] அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 112 முக்கிய வழக்குகளை சமூக சமய நடுநிலையம் உன்னிப்பாக கண்காணித்து வருகின்றது.

[1] *இவ்வறிக்கை, ஆங்கில மூல ஆவணத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு ஆகும். மூலங்கள் மற்றும் உள்ளடக்கத்தில் ஏதேனும் வேறுபாடுகள் இருந்தால், ஆங்கில அறிக்கையே முதன்மை ஆவணமாகவும் துல்லியமானதாகவும் கருத வேண்டும்*

| வழக்கு எண் மற்றும் நீதிமன்றம் | சுருக்கம் | கடைசி விசாரணை திகதி | அடுத்த விசாரணை திகதி |
|---|---|---|---|
| HC (TAB) 2972/21<br>கொழும்பு மேல் நீதிமன்றம் | குற்றஞ்சாட்டப்பட்ட 25 பேர் மீதான பிரதான குற்றவியல் வழக்கு<br>உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுக்கு சதி செய்தமை, அதற்கு உதவியமை, உள்ளிட்ட 23,270 குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.<br>*தற்போது, விசாரணையின் ஆரம்ப கட்டத்தில் இந்த வழக்கு உள்ளது* | 13 பிப்ரவரி 2025 | 12 மார்ச் 2025 |
| HC (TAB) 2900/21<br>HC (TAB) 2 899/21<br>கொழும்பு மேல் நீதிமன்றம் | ஈஸ்டர் தாக்குதல்களை தடுக்கத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு<br><br>உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை தடுக்கத் தவறியமை மற்றும் கடமைகளை புறக்கணித்தமைக்காக முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அவர்களின் தரப்பு வாதத்தை கேட்காமலேயே அவர்களை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதாயம் (Trial-at-Bar) உத்தரவிட்டது. உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோடு. *இது தொடர்பான தீர்ப்பு தற்போது நிலுவையில் உள்ளது* | 5 நவம்பர் 2024 | - |
| உயிர்த்த ஞாயிறு | உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலை தடுத்து நிறுத்த தவறியவர்களுக்கு எதிராக | 15 | |

| | | | |
|---|---|---|---|
| தாக்குதல் தொடர்பான 12 அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை<br><br>உயர் நீதிமன்றம் | 12 அடிப்படை உரிமைகள் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. தாக்குதல் பற்றிய நம்பகமான தகவல்கள் கிடைக்கப்பெற்ற போதிலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுத்து நிறுத்துவதற்கு, அடிப்படை உரிமை மனுக்களில் பெயர் குறிப்பிட்டுள்ள நபர்கள் தவறியுள்ளனர் என்றும், இதன்மூலம் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்றும் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு அமைய அரசாங்கம் எடுத்த நடவடிக்கையினை reparations.gov.lk என்ற இணையத்தளத்தில் காணலாம். | ஜூலை 2024 | |
| HC 78/2021 புத்தளம் மேல் நீதிமன்றம் | ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் ஏனையோருக்கு எதிரான வழக்கு<br><br>உயிர்த்த ஞாயிறு குண்டுதாரிகளில் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்த 'சேவ் தி பேர்ல்ஸ்' தொண்டு நிறுவனத்துடன் தொடர்புடையவராகக் கூறப்படும் வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிரான வழக்கு இதுவாகும். தற்போது இந்த வழக்கு விசாரணையில் உள்ளது. எனினும், ஹெஜாஸிற்கு எதிரான சாட்சிகள் பலவீனமாக உள்ளன. | 9 டிசம்பர் 2024 | மே மாதம் 2 மற்றும் 9 2025 |
| 23084/22<br>**கோட்டை நீதவான் நீதிமன்றம்** | மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தனிப்பட்ட முறைப்பாடு<br>அலட்சியத்தால் மரணம் மற்றும்/அல்லது கடுமையான காயத்தை ஏற்படுத்திய குற்றவியல் தண்டனைச் சட்டக் குற்றத்துடன் இது தொடர்புடையது. ரிட் வழக்கின் உத்தரவு கிடைக்கும்வரை, தற்போது இந்த வழக்கு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. | மார்ச் 17ஆம் திகதி 2023 | |

| | | | |
|---|---|---|---|
| TAB 4485/21 கேகாலை மேல் நீதிமன்றம் | மாவனெல்ல பகுதியில் புத்தர் சிலைக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை குறித்த வழக்கு<br>பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் 16 பேருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் இருந்து, தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் எனக் குறைக்கப்பட்ட பின்னர், குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இந்த நாசவேலைக்கு காரணமான நபர், ஈஸ்டர் தாக்குதலின் தற்கொலை குண்டுதாரி சஹ்ரான் ஹாசிம் என பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வழக்கு 2023ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டதோடு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு இடைநிறுத்தப்பட்ட தண்டனைகள் வழங்கப்பட்டன. | ஜனவரி 18ஆம் திகதி 2023 | - வழக்கு முடிவுறுத்தப்பட்டது |
| புத்தளம்/TAB 107/2021 புத்தளம் மேல் நீதிமன்றம் | வனாத்தவில்லு பயிற்சி முகாம் மற்றும் வெடிகுண்டு வழக்கு<br>ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புடைய பயிற்சி முகாம் மற்றும் வெடிபொருட்கள் வனாத்தவில்லுவில் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பான வழக்கு இதுவாகும். வாக்குமூலம் தானாக முன்வந்து வழங்கப்பட்டதா அல்லது கட்டாயப்படுத்தப்பட்டதா (voir dire inquiry) என்பதை சரிபார்க்க மேலதிக விசாரணை நடைபெறுகின்றது. | 28 ஜனவரி 2025 | 18 மார்ச் 2025 |
| HC 148/2021 புத்தளம் மேல் நீதிமன்றம் | அஹ்னாப் ஜெசீமிற்கு எதிரான வழக்கு<br>இளம் கவிஞரான அஹ்னாப் ஜெசீம் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தடுத்து வைக்கப்பட்டிருந்த அஹ்னாப் 19 | டிசம்பர் 12ஆம் திகதி 2023 | வழக்கு முடிவுறுத்தப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | மாதங்களின் பின் பிணையில் விடுவிக்கப்பட்டார். மேலும், அவருக்கு எதிரான சாட்சியங்கள் இல்லாததால், கைது செய்யப்பட்ட 43 மாதங்களுக்குப் பின்னர் அவர் விடுவிக்கப்பட்டு வழக்கு முடிவுறுத்தப்பட்டது. | | |
| 16235/MR<br>நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றம் | <u>சிவில் வழக்குகள்</u><br>உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக ஏற்பட்ட சேதங்களை மீட்டெடுப்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தற்போது முன்விசாரணை கட்டத்தில் உள்ளது. | 28 ஜூன் 2024 | ஏப்ரல் 4ஆம் திகதி 2025 |
| Writ 143/24<br>மேன்முறையீட்டு நீதிமன்றம் | <u>சமூக சமய நடுநிலையம், அதன் பணிப்பாளர் மற்றும் பாதிக்கப்பட்டவரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு</u><br>இது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக குற்றவியல் விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு பொலிஸ் மா அதிபர் மற்றும் சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தும், செயலுறுத்தும் நீதிப்பேராணைகளை (Mandamus writs) நாடியுள்ளது. வழக்கு தொடர்பான கூடுதல் நடவடிக்கைக்காக, 2024 மே 28ஆம் திகதியன்று மறுபரிசீலனை செய்யப்படும். | நவம்பர் 13ஆம் திகதி 2024 | பெப்ரவரி 27ஆம் திகதி 2025 |
| CA RTI/11/2023<br>மேன்முறையீட்டு நீதிமன்றம் | <u>பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு எதிரான தகவல் அறியும் உரிமை வழக்கு</u><br>உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான தவறுகளுக்காக தற்போதைய பொலிஸ் மா அதிபர் உட்பட சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை கோரி, முதற்கட்டமாக தகவல் அறியும் உரிமை கோரிக்கையொன்றை சமூக_____சமய | ஜனவரி 22ஆம் திகதி 2025 | மார்ச் 05ஆம் திகதி 2025 |

| | | | |
|---|---|---|---|
| | நடுநிலையம் தாக்கல் செய்தது. தற்போது இது தொடர்பான வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளதோடு, பிரதிவாதி நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும். | | |

*இதுபற்றிய விரிவான அட்டவணை பின்வரும் அறிக்கையில் உள்ளது: சமூக சமய நடுநிலையம். "உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக 11 முக்கிய நீதிமன்ற வழக்குகளின் முக்கிய விபரம் (2021 ஜனவரி 1ஆம் திகதி - ஜூன் 21ஆம் திகதி)." சமூக__சமய நடுநிலையம், 2023 ஜூன் 21ஆம் திகதி. https://easterattack.info/csr-reports/.

அரசியல் சூழல், பாதிக்கப்பட்ட சிலரைப் பற்றிய விபரங்கள், சமூக-கலாசார மற்றும் பொருளாதார பாதிப்புகள் பற்றிய கலந்துரையாடல்கள், சட்ட வாதங்கள் பற்றிய புதுப்பிப்புகள் மற்றும் நீதி நிலைநாட்டப்படாமை பற்றிய பகுப்பாய்வு உள்ளிட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பற்றிய கண்ணோட்டத்தை இந்த அறிக்கை வழங்குகிறது.

## உள்ளடக்கம்


உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டு 6 வருடங்கள்: ........1

பின்னணி ........11

அரசியல் சூழ்நிலை : குழப்பங்கள் ........14

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர்பிழைத்தவர்கள்: உயிர்கள் இழக்கப்பட்டன, எதிர்காலம் சிதைக்கப்பட்டது ........16

சமூக கலாச்சார தாக்கம்: அதிகளவான பதற்றம் ........20

பொருளாதார பாதிப்பு: தீமை ........22

சட்டக் கண்ணோட்டம்: வழக்குப் பதிவு ........24

1. உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் குற்றம் சாட்டப்பட்ட 25 நபர்களுக்கு எதிரான முக்கிய குற்றவியல் வழக்கு- HC (TAB) 2972/21 ........24

2. உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்க தவறியமைக்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபருக்கு எதிரான வழக்கு - HC/TAB/2899/21 & HC/TAB/2900/21 ........26

4. ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் ஏனையோருக்கு எதிரான வழக்கு- HC 78/2021 30

5. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தனிப்பட்ட முறைப்பாடு - 23084Æ22 ........31

........32

6. மாவனெல்ல பகுதியில் புத்தர் சிலைக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை குறித்த வழக்கு- TAB 4485/21 ........32

7. வனாத்தவில்லு பயிற்சி முகாம் மற்றும் வெடிகுண்டு வழக்கு - புத்தளம் /TAB/107/2021 ........33

8. அஹ்னாப் ஜெசீமிற்கு எதிரான வழக்கு- HC 148/2021 ........33

9. உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் ஏற்பட்ட சேதங்களை மீட்பதற்கான வழக்கு 16235/MR ........34

10. நிலந்த ஜயவர்தனவிற்கு எதிரான எழுத்தாணை வழக்கு - Writ 143/24 ........34

11. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராக தகவல் அறியும் உரிமை வழக்கு - CA RTI/11/2023 ........36

யாரை குற்றம் சொல்வது? ........37

சனல் 4 வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆவணப்படம் ..........41
எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? ..........44
இழப்பீடு ..........44
நீதிக்கான தேசிய மற்றும் சர்வதேச இயக்கம் ..........48
பரிந்துரைகள் ..........50
பிண்ணிணைப்புகள் ..........51

## பின்னணி

2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு காலை ஆராதனை இடம்பெற்றுக்கொண்டிருந்த நீர்கொழும்பு, மட்டக்களப்பு மற்றும் கொழும்பிலுள்ள மூன்று தேவாலயங்கள் மற்றும் ஷங்ரி-லா, சினமன் கிராண்ட் மற்றும் கிங்ஸ்பரி ஆகிய ஆடம்பர ஹோட்டல்களில் காலை உணவு பரிமாறப்பட்டுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவற்றின் சாப்பாட்டு அறைகளை இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [14]

வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்ற மொத்தம் எட்டு இடங்கள் வருமாறு [15]:

- புனித அந்தோனியார் ஆலயம், கொழும்பு
- புனித செபஸ்டியன் தேவாலயம், நீர்கொழும்பு
- சியோன் தேவாலயம், மட்டக்களப்பு
- சினமன் கிராண்ட் ஹோட்டல், கொழும்பு
- ஷங்ரி லா ஹோட்டல், கொழும்பு
- கிங்ஸ்பரி ஹோட்டல், கொழும்பு
- தெஹிவளை-கல்கிஸ்ஸ பகுதியிலுள்ள, தெஹிவளை மிருகக்காட்சி சாலைக்கு அருகில்.

- தெமட்டகொட, மஹவில தோட்டத்திலுள்ள ஒரு வீடு.




*மூலம் - CNN, 'Bombs tear through Sri Lankan Churches and hotels killing 250 people', < [https://edition.cnn.com/2019/04/21/asia/sri-lanka-explosions/index.html](https://edition.cnn.com/2019/04/21/asia/sri-lanka-explosions/index.html) > Accessed 16th December 2023.*

உயிர்த்த ஞாயிறு காலை 8.45 மணியளவில் தாக்குதல் தொடர்பான முதலாவது அறிவிப்பு வெளியாகியது. அடுத்த 20 நிமிடங்களுக்குள், நாடு முழுவதும் உள்ள ஹோட்டல்கள் மற்றும் தேவாலயங்களில் ஒரே நேரத்தில் ஆறு வெடிப்புச் சம்பவங்கள் நடந்தேறின.[16] ஆரம்ப தாக்குதல்கள் நடந்து ஐந்து மணித்தியாலங்களுக்குப் பின்னர், கொழும்பின் புறநகர்ப் பகுதியான தெஹிவளையில் உள்ள மிருகக்காட்சிசாலைக்கு அருகில் ஏழாவது வெடிப்பு இடம்பெற்றது. அரை மணி நேரத்திற்குப் பின்னர், கொழும்பு நகர எல்லைக்குள் அமைந்துள்ள தெமட்டகொடையில், பொலிஸ் சோதனையின் போது எட்டாவது வெடிப்பு நிகழ்ந்தது, இதன் விளைவாக மூன்று அதிகாரிகள் கொல்லப்பட்டனர்.[17] ஐ.எஸ்.ஐ.எஸ் சித்தாந்தத்தைப் பின்பற்றும் இஸ்லாமிய தீவிரவாதிகளே இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை நடத்தினர்.[18]

இச்சம்பவம் இடம்பெற்று 5 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான சரியான எண்ணிக்கை நிச்சயமற்றதாகவே

உள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்பாக, பல்வேறு தகவல் மூலங்கள் வெவ்வேறு எண்ணிக்கையை கூறுகின்றன. இது பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். காரணம், சில குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்களின் இழப்புக்கான இழப்பீட்டைப் பெறமுடியாமல் போகலாம். எனினும், இறந்தவர்களின் எண்ணிக்கை வரை 315 முதல் 259 இருக்கும் என்று அனைத்துதகவல்கள் மூலங்களும் தெரிவிக்கின்றன. இதில் குறைந்தபட்சம் குழந்தைக 45ளும் வெளிநாட்டவர்க 40ளும் உள்ளடங்குகின்றனர்.

400இற்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.[19] கொல்லப்பட்ட வெளிநாட்டவர்களில், குறைந்தபட்சம் பன்னிரண்டு இந்தியர்கள், எட்டு பிரித்தானியர்கள், நான்கு சீனர்கள் உள்ளடங்குவதோடு, ஏனையோர் ஸ்பெயின், துருக்கி, போர்த்துக்கல், சவூதி அரேபியா, அமெரிக்கா, ஜப்பான், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து மற்றும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.[20] 21.8 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட இலங்கையில்,[21] 7.4 வீதமானவர்கள் மட்டுமே கிறிஸ்தவர்கள் ஆவர்.[22] இவர்களே குண்டுத்தாக்குதல்களில் இலக்குவைக்கப்பட்ட மக்கள் குழுவினர்.




தாக்குதல் நடத்தப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர், மேலும் இரண்டு வெடிகுண்டுகளையும், குறைந்தளவில் வெடிக்கும் சுமார் 80 டெட்டனேட்டர்களையும் பொலிஸார் கண்டுபிடித்தனர். கிழக்கு மாகாணத்தின் சாய்ந்தமருது பிரதேசத்தில், தாக்குதலுக்கு பிரதான காரணகர்த்தா என சந்தேகிக்கப்படும் சஹ்ரான் ஹாசிமின் உறவினர்களது வீட்டிலும் சோதனை

நடத்தப்பட்டது. இந்த சோதனையின் போது, பாதுகாப்பு தரப்பினருக்கும் இஸ்லாமிய தீவிரவாதிகள் என சந்தேகிக்கப்படுபவர்களுக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில், 6 குழந்தைகள் உட்பட 15 பேர் உயிரிழந்தனர். மேலும், அதே பகுதியில் உள்ள மற்றொரு வீட்டில் வெடிகுண்டு தயாரிக்கும் பொருட்கள் மற்றும் ஆயிரக்கணக்கான உலோக உருண்டைகள் கண்டெடுக்கப்பட்டன.[23] இராணுவப் பேச்சாளர் சுமித் அத்தபத்துவின் கூற்றின் பிரகாரம், குறித்த வீட்டினை படையினர் நெருங்கியபோது, மூன்று வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதோடு, துப்பாக்கிச் சூடு நடத்த ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பதிலுக்கு, பாதுகாப்பு தரப்பினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதோடு, பாரியளவிலான வெடிபொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு இல்லத்தையும் சோதனையிட்டனர்[24]

## அரசியல் சூழ்நிலை : குழப்பங்கள்

*தீவிரவாத குழுக்களால் நடத்தப்பட்ட இந்த பயங்கரமான தாக்குதலுக்கு நாட்டின் அரசியல் ஸ்திரமின்மை சரியான சூழலை வழங்கியிருக்கலாம்.*

நல்லாட்சி அரசாங்கம் (யஹபாலனய என்ற மகுட வாசகத்துடன் செயற்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இந்த தாக்குதல்கள் இடம்பெற்ற காலத்தில், ரணில் விக்ரமசிங்க பிரதமராக செயற்பட்டார். தாக்குதலால் ஏற்பட்ட சோகத்திற்கு முன்னரும் பின்னரும், நாட்டின் அரசியல் நிலைமை மிகவும் நிலையற்றதாகவே காணப்பட்டது.[25] அரசியலமைப்பு சதி மூலம் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தமை, பின்னர் நீதிமன்றங்களால் இரத்து செய்யப்பட்டமை ஒரு சிறந்த உதாரணம். இது நாட்டில் மிகவும் எதிர்பாராத மற்றும் விரும்பத்தகாத அரசியல் சூழ்நிலையை உருவாக்கியது. அரசியலமைப்பு சதியின் பின்னணியில் உள்ள நிகழ்ச்சி நிரலையும், நாட்டின் அரசியல் ஸ்திரமின்மைக்கு அது எவ்வாறு பங்களித்தது என்பதையும் புரிந்துகொள்வது முக்கியமானது.

“2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை, ஜனாதிபதி செயலகத்திலிருந்து மூன்று முக்கிய அறிவிப்புகள்

வெளியிடப்பட்டன, அவை பின்வரும் ஒழுங்குமுறையில் இடம்பெற்றன: (அ) அரசாங்கத்தில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விலகுவதாக அறிவிக்கப்பட்டது. (ஆ) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றார். (இ) அரசியலமைப்பின் உறுப்பரை 42(4)இன் கீழ் பிரதமர் பதவியில் இருந்து ரணில் விக்ரமசிங்கவை நீக்கியதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எழுத்துமூலம் அவருக்கு அறிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது."[26]

பாராளுமன்றத்தின்[27] ஆலோசனையின்றி, முழு நிகழ்வும் முற்றிலும் இரகசியமாகத் திட்டமிடப்பட்டமை நாட்டையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இதன் பின்னணியில் உள்ள நோக்கங்கள் குறித்து, இது சில சிக்கலான கேள்விகளை எழுப்பியுள்ளது. எனவே, முழு நிகழ்வுகளும் நாட்டில் அரசியலமைப்பு நெருக்கடிக்கு வழிவகுத்தன.

2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்திற்குப் பின்னர், மரணம், இராஜினாமா, பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழத்தல் அல்லது அக்ராசன உரை, வரவு செலவுத் திட்டம் அல்லது நம்பிக்கையில்லா வாக்கெடுப்பின் மூலம் பாராளுமன்றத்தின் நம்பிக்கையை இழந்தால் மட்டுமே பிரதமர் பதவியில் இருந்து விலக முடியும் (உறுப்புரை 46(2) மற்றும் (48).[28]

கல்விமான்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் இந்த அரசியலமைப்பு சதியை எதிர்த்தனர். இறுதியில், ரணில் விக்ரமசிங்க மீண்டும் தனது பிரதமர் பதவியைப் பெற்றார்.

*"நான் இங்கு ரணிலுக்காக வரவில்லை. ஜனநாயகம் மற்றும் நல்லாட்சிக்காகவே இங்கு வந்துள்ளேன்' என்று ஒரு நடுத்தர வயதுப் பெண் ஏந்தியிருந்த சுவரொட்டி இதனை சிறப்பாக பதிந்திருந்தது"[29]*

இவ்வாறான எதிர்மறையான நிகழ்வுகள், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான தொழில்சார் உறவையும் ஒருங்கிணைப்பையும் சீர்குலைத்தது. இது, நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கு பலவீனமடைய பங்களித்தது எனலாம்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பொதுமக்கள் மத்தியில் ஒரு எச்சரிக்கை உணர்வை உருவாக்கி, பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தியது மற்றும் மேலும் பாதிப்புகள் ஏற்படுவதில் இருந்து அவர்களைப் பாதுகாக்க ஒரு தலைவர்

தேவைப்படுகிறார் என்ற சூழலை உருவாக்கியது. இவ்வாறான சந்தர்ப்பத்தில், யுத்தகாலத்தில் பாதுகாப்பிற்கு தலைமையேற்று செயற்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ, தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போவதாக ஏப்ரல் 26ஆம் திகதியன்று அறிவித்தார். அழிவுகரமான தாக்குதல்கள் இடம்பெற்ற ஐந்து நாட்களுக்குப் பின்னர் இந்த அறிவிப்பு வெளியாகியது. இஸ்லாமிய தீவிரவாதம் பரவுவதை நிறுத்தவும், 'வலையமைப்புகளை அழிப்பதாகவும்' அவர் உறுதியளித்தார்.[30]

2019ஆம் ஆண்டு ராஜபக்ஷ தரப்பினரின் முழு ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரமும் இந்த சித்தாந்தத்தை மையமாகக் கொண்டே முன்னெடுக்கப்பட்டது. தேசிய பாதுகாப்பை விட இன நல்லிணக்கத்திற்கும் தனிமனித சுதந்திரத்திற்கும் முன்னுரிமை அளித்தமைக்காக அப்போதைய அரசாங்கத்தை விமர்சித்தனர்[31]. இந்த பிரச்சாரம் மற்றும் வாக்குறுதியின் கீழ், 2019ஆம் ஆண்டு நவம்பரில் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டார்.[32]

## பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர்பிழைத்தவர்கள்: உயிர்கள் இழக்கப்பட்டன, எதிர்காலம் சிதைக்கப்பட்டது

பல்வேறு வயது, தேசியம் மற்றும் பொருளாதார பின்னணிகளைச் கொண்ட பலரின் உயிர்களை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் பறித்தன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு இலக்குவைக்கப்பட்ட இடங்கள் பெரும்பாலும் குடும்பங்கள் விடுமுறையை கழிக்க பயன்படுத்துபவை மற்றும் சமய முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். அந்தவகையில், இந்த சோகமான சூழ்நிலை பல்வேறு சமூகங்கள் தமது சொந்த மக்களின் இழப்பு குறித்து வருத்தப்படுவதற்கு காரணமாக அமைந்தது. காலைநேரத்தில் தேவாலய ஆராதனையில் ஈடுபட்டிருந்த,[33] பல குழந்தைகள், சுற்றுலாப் பயணிகள், டென்மார்க் தொழிலதிபரும் 'பெஸ்ட்செல்லர்' நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அண்டெர்ஸ் ஹோல்ச் பௌல்செனின்,[34] குழந்தைகள் உள்ளிட்ட முழு குழும்பத்தார், ஐந்து பேரைக் கொண்ட ஒரு குடும்பம், அத்துடன் விடுமுறையைக் கழிக்க இலங்கைக்கு வந்திருந்த JDSஇன்

(இந்திய அரசியல் கட்சி) ஏழு உறுப்பினர்களும் இந்த தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்.[35] எவ்வாறாயினும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர் பிழைத்தவர்களின் பல்வேறு குழுக்களால் விரிவான கட்டுரைகள் மற்றும் ஊடக அறிக்கைகள் கிடைத்த போதிலும், ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் பெரும்பாலும் கவனிக்கப்படாத ஒரு சமூகமாக இலங்கையின் மலையக தமிழ் சமூகம் காணப்படுகின்றது.

நாட்டின் மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள தேயிலை பெருந்தோட்ட சமூகம் என்றழைக்கப்படும் மலையக தமிழர்கள், சமூகத்தில் குறைவான பிரதிநிதித்துவம் மற்றும் அவர்களின் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே உள்ளன. தென்னிந்தியாவில் இருந்து பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் மலையக தோட்டங்களில் வேலை செய்ய பெண்களும் ஆண்களும் அழைத்துவரப்பட்டு இரண்டு நூற்றாண்டுகள் கடந்துள்ள போதிலும்,[36] அவர்களின் வாழ்க்கைத் தரமும் தற்போதைய நிலையும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காணவில்லை. அடிமைத்தனத்தின் ஒரு பகுதியாக காலனித்துவ காலத்தில் உருவான போராட்டம், சமத்துவமின்மை மற்றும் ஒழுங்குமுறை இல்லாமை ஆகியவை இன்றும் இந்த சமூகத்தின் வாழ்வில் தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. தற்போது மலையக தமிழர்கள் சாதி, வர்க்கம், தொழிலாளர் பிரிவு மற்றும் இனம்,[37] ஆகியவற்றின் அடிப்படையில் சமூக பாகுபாடுகளை அனுபவித்து வருகின்றனர். அவர்களுக்கு மற்றவர்களைப் போல சம உரிமைகள் வழங்கப்படவில்லை, வேலைவாய்ப்பைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர், குறைந்த ஊதியத்தைப் பெறுகிறார்கள், அரசாங்கத்தில் குறைந்தபட்ச பிரதிநிதித்துவம் காரணமாக அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்டவர்களாக உள்ளனர்.[38] மேலும், உலகின் இரண்டாவது பெரிய தேயிலை ஏற்றுமதியாளராக இலங்கை காணப்படுகின்ற போதிலும், அதன் நிலமற்ற தேயிலை தொழிலாளர்கள் (பெரும்பாலான மலையக சமூகத்தவர்கள்) நாட்டில் மிகவும் ஏழ்மையானவர்களாகவே உள்ளனர்.[39] தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் நாளொன்றிற்கு 3.65 அமெரிக்க டொலர்களை பெறும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர் என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.[40]

*“தனிநபர் வருமானம், வாழ்க்கை நிலைமைகள், ஆயுட்காலம், கல்விச் சாதனைகள் அல்லது பெண்களின் நிலை என எந்த அளவீட்டினை*

*எடுத்துக்கொண்டாலும், அவை ஏணியின் அடிப்பகுதியிலேயே அமைந்துள்ளன."*[41]

பொருளாதார சவால்கள், அரசியல் புறக்கணிப்பு, குடியுரிமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றால் சமூகப் பாகுபாடுகள் மற்றும் மிகவும் பின்தங்கிய சமூகங்களில் ஒன்றாக இருப்பதால், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களால் கணிசமான எண்ணிக்கையிலான மலையக தமிழர்கள் பாதிக்கப்பட்டனர்.

நாட்டின் மத்திய மலைநாட்டு பிரதேசங்கள் இந்த தாக்குதல்களில் இலக்கு வைக்கப்படாத போதிலும், கொழும்பில் பணிபுரியும் அல்லது தலைநகருக்கு வருகைதந்த பல மலையக தமிழர்கள் புனித அந்தோனியார் தேவாலயத்தில் ஆராதனையில் கலந்து கொண்டிருந்தனர். பேரழிவுகரமான குண்டுவெடிப்பின் விளைவாக, பலர் தமது அன்புக்குரியவர்களை இழந்துள்ளனர். அவர்களில் சிலர் தமது குடும்பங்களுக்கு நிதி ரீதியாக பிரதானமாக பங்களிப்பவர்களாக இருந்துள்ளனர். ஆகவே, இச்சமூகத்திலுள்ள மக்களுக்கு முன்னொருபோதும் ஏற்படாத நிதிச்சுமை ஏற்பட்டுள்ளதால், உணர்வு ரீதியான இழப்பிற்கு அதிகமாக, அதிகரித்த தேவையை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் சமூக நடவடிக்கை பிரிவான செத் சரண, வீடுகளை வழங்கியது. எனினும், இந்த வீடுகள் கொழும்பில் அமைந்துள்ளதால், சிலர் தாம் பழகிய வாழ்க்கையையும், வேலைகளையும் விட்டு வெளியேறி வேறு இடத்தில் தமது வாழ்க்கையை புதிதாக ஆரம்பிக்கவேண்டி ஏற்பட்டது. உயிர் பிழைத்தவர்களில் சிலர், குழந்தைகள் உட்பட குடும்ப உறுப்பினர்களை விட்டுச் செல்ல வேண்டியிருந்தது. ஏனெனில் அவர்களின் பாடசாலை கல்வியை இடையூறு செய்ய முடியாது மற்றும் கொழும்பில் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்ற அதிக பணம் செலவாகும் என்பதால் இவ்வாறு செய்தனர்.

*வதனி,*[42*] *தமது குடும்பத்தின் பிரதான வருமானம் ஈட்டுபவராக இருந்த கணவரை இந்த தாக்குதலில் இழந்துவிட்டார். இந்த தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், தமது மூன்று வயது குழந்தையுடன் அவர் ஒரு தொழிலற்ற விதவையானார். ஒரு நிலையான வருமான வழி இல்லாமல், அவருடைய மாமியார் உட்பட ஐந்து உறுப்பினர்களை உள்ளடக்கிய முழு குடும்பத்தையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பை அவர் ஏற்க வேண்டியிருந்தது. அவருக்கு*

*கொழும்பில் ஒரு வீடு கிடைத்தது. அவரது குழந்தையை மாமியார் வீட்டில் கவனித்துக்கொள்வதோடு, கொழும்பில் அவர் தொழில்செய்து பெறும் வருமானத்தை மாமியார் குடும்பத்திற்கு அனுப்புகின்றார்.*

தமது குழந்தைகளை இழந்த அதிர்ச்சியில் மனநோய்களை அனுபவிக்கும் பெற்றோர்களும் உள்ளனர். துரதிர்ஷ்டவசமாக, அவர்களின் நிதி நிலைமை காரணமாக அவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவியை பெற்றுக்கொள்ள முடியவில்லை. காரணம், அவர்கள் மீதமுள்ள குழந்தைகளுக்கு அவசியமாக உணவு, மின்சாரம் மற்றும் கல்வி போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கு பணம் செலுத்துவதில் முன்னுரிமை வழங்குகின்றனர்.

*ஆறு பேர் கொண்ட குடும்பத்திற்கு பிரதான வருமானம் ஈட்டுபவராக உள்ள நாட்கூலியான ஜோன், இந்த தாக்குதலில் தமது மகளை (5 வயது) இழந்துவிட்டார். மகளின் எதிர்பாராத மரணத்தினால் பாதிக்கப்பட்ட அவரது மனைவி, இருமுனையப் பிறழ்வினால் (bipolar disorder) பாதிக்கப்பட்டுள்ளார். இதனால், குழந்தைகளை தனியாக விட்டுவிட்டு அவருக்கு தொழிலுக்குச் செல்ல முடியாமல், சொந்த இடவசதி கூட இல்லாமல் மிகவும் ஏழ்மையான வாழ்க்கையை வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.*

இந்தச் சமூகத்தில் உயிர் பிழைத்த சிலர் மருத்துவச் செலவுகளைக் கையாள்வதில் சிரமப்படுகிறார்கள். இதற்கு மேலதிகமாக, அவர்களின் தொழில் மற்றும் எதிர்காலத்தில் இந்த காயம் ஏற்படுத்திய தாக்கத்தை சமாளிக்க அவர்கள் போராடுகிறார்கள்.

*இந்த தாக்குதல் காரணமாக, ஆகாஷின்* கேட்கும் திறன் குறைந்துவிட்டது. இதற்கு அறுவை சிகிச்சை மேற்கொள்ளுமாறு வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர். ஆனால், அதற்கு 3 லட்சம் ரூபாய் செலவாகும். மேலும், அவர் 3 மாதங்கள் ஓய்வெடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ள நிலையில், அவரது மூன்று மாதகால சம்பளம் இழக்கப்படுகின்றது. இது அவரது முழுக் குடும்பத்தையும் பாதிக்கும் என்பதால், அறுவைச் சிகிச்சையை அவர் ஒத்திவைத்தார். நன்கொடையாளர்களின் உதவியால், அதிஷ்டவசமாக அவருக்கு இலவசமாக அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆகாஷிற்கு*

*தன்னைத்தானே கவனித்துக்கொள்ள முடிந்தபோதும், இன்னும் சில பிரச்சினைகள் இருப்பதாகத் தெரிகின்றது. அத்தோடு, மற்றுமொரு அறுவைச் சிகிச்சைக்கு வைத்தியர்கள் உத்தரவிட்டுள்ளனர். ஆகாஷிற்கு இன்னும் சிறிது வலி இருப்பதோடு, வாடிக்கையாளர்களுடன் தொடர்புகொள்ளும்போது தெளிவாக செவிமடுப்பதிலும் புரிந்துகொள்வதிலும் சிரமத்தை எதிர்கொள்கின்றார். இவ்வாறான சிரமங்கள் காரணமாக, தொழிலை விட்டுவிட்டு இப்போது தொழிலற்று இருக்கின்றார்.*

ஈஸ்டர் தாக்குதல் படுகொலைகளால் பாதிக்கப்பட்ட பல அப்பாவி மக்களின் மத்தியில் இவை ஒரு சில கதைகள் மாத்திரமே. உயிர்கள் இழக்கப்பட்டு, எதிர்காலம் சிதைக்கப்பட்டதால், இதன் தாக்கம் பெரியது மற்றும் நீடித்தது. ஒரு வலிமிகுந்த சம்பவத்தின் பின்னர், தற்போது தமது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் பலர் சவால்களை எதிர்கொள்கின்றனர். முழு நாட்டையும் பாதித்துள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் நிதி போராட்டங்களுக்கு மத்தியில், குறிப்பாக மலையக சமூகத்தினர் கடுமையான பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர்.

## சமூக கலாச்சார தாக்கம்: அதிகளவான பதற்றம்

தாக்குதலுக்குப் பின்னர், இலங்கை அரசாங்கம் சமூக ஊடகங்களை முடக்கியது, இரண்டு நாட்களுக்கு பாடசாலைகளை மூடியது, நாடு முழுவதும் 12 மணி நேர ஊரடங்கு உத்தரவை விதித்தது மற்றும் விசாரணைகள் நடந்துகொண்டிருந்த போது கொழும்பு மற்றும் ஏனைய இடங்களில் பாதுகாப்பை அதிகரித்தது. இந்நிலையில், பேஸ்புக் நிறுவனம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்த்து -

“அவசரகால பதிலளிப்பவர்களுக்கும் சட்ட அமுலாக்கத்திற்கும் பேஸ்புக் நிறுவனத்தின் குழுக்கள் உதவுவதோடு, எமது விதிமுறைகளை மீறும் வகையிலான உள்ளடக்கத்தையும் நீக்குகின்றன”[43]

ஈஸ்டர் தாக்குதல்களின் தற்கொலை குண்டுதாரிகளை இன மற்றும் மத பின்னணிகளை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தில் அடையாளம் காணப்பட்டமையானது, நாட்டில் பொது மக்களிடையே இன நல்லிணக்கத்திற்கு

குறிப்பிடத்தக்க தீங்கினை விளைவித்தது.[44] இந்த சம்பவத்தின் பின்னணியில் இன மற்றும் மத நிகழ்ச்சி நிரல் இருப்பதாக ஊடகங்கள் சித்தரித்தது, நிலைமையை மேலும் மோசமாக்கியது. இதன் விளைவாக, மத மற்றும் இனக்குழுக்களுக்கு இடையிலான நம்பிக்கை சீர்குலைந்தது. முஸ்லிம் சமூகம் பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தையும் ஓரங்கட்டப்படுவதையும் எதிர்கொண்டது. ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் மீதும் வெறுப்புணர்வு பரவியது. கிராம அளவில் முஸ்லிம்களின் வணிகங்களுக்கு ஆதரவளிக்க மறுத்தமையானது, நாட்டில் ஏற்பட்ட ஒரு பாரிய சமூக-கலாச்சார அதிர்ச்சியின் சிறிய பிரதிபலிப்பாக அமைந்தது.[45]

*'நாட்டில் வாழும் சுமார் இரண்டு மில்லியன் முஸ்லிம்களின் மீது, பொதுமக்களின் கோபம் திரும்பியது.'*[46]

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகள் சேதப்படுத்தப்பட்டன, தீவைக்கப்பட்டன மற்றும் அழிக்கப்பட்டதன் மூலம், பல முஸ்லிம்கள் மிகவும் மோசமான அச்சுறுத்தலையும், குறிவைக்கப்பட்டதாகவும் உணர்ந்தனர். புத்தளம் மாவட்டத்தில் தனது வர்த்தக நிலையத்தின் மீது கும்பல் ஒன்று தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கத்திக்குத்து காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.[47] முஸ்லிம் கடைகளில் எதனையும் கொள்வனவு செய்ய வேண்டாமென, ஜூன் மாத்தில் மூத்த பிக்கு ஒருவர் சிங்கள மக்களை பகிரங்கமாக வலியுறுத்தியதால் பதற்றம் தீவிரமடைந்தது.[48] பதட்டமான சூழ்நிலையும் கலவரமும் முஸ்லிம் சமூகத்தினரிடையே கொந்தளிப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியது. சிங்கள பெரும்பான்மையான பாதுகாப்புப் படையினர், இவற்றிற்கு உடந்தையாக இருப்பதாகவும், கும்பல்களைத் தடுப்பதில் போதியளவு தலையீடு செய்யவில்லையென்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.[49] மக்களை அமைதியாக இருக்குமாறும் இணையத்தில் வெளியாகும் போலியான தகவல்களை நம்ப வேண்டாம் என்றும் மத மற்றும் அரசியல் தலைவர்கள் வேண்டுகோள் விடுத்த போதும், சமூக ஊடகங்கள் முடக்கப்பட்டிருந்த போதிலும்கூட சமூக ஊடகங்கள் மூலம் வதந்திகளும் பதற்றமும் பரவியது.[50] சிங்கள பெண்களுக்கு முஸ்லிம் வைத்தியர் ஒருவர் இரகசியமாக கருத்தடை செய்ததாக பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி, எவ்வித ஆதாரங்களும் இல்லாதபோதும் அவர் கைதுசெய்யப்பட்டார்.[51] மேலும் தமது அடையாளத்தை மறைக்கும் வகையிலான சகல முகக்கவசங்களுக்கும் ஜனாதிபதி தடை

விதித்தார்.[52] முஸ்லிம் பெண்கள் அணியும் ஹிஜாப் பற்றி குறித்த தடையில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், இதனால் முஸ்லிம் பெண்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றனர் என உரிமை தொடர்பாக பணியாற்றும் குழுக்கள் சுட்டிக்காட்டின.[53] இப்பிரச்சினைகள் காரணமாக, அரசு இராணுவப் பிரசன்னத்தை அதிகரித்து, பாதுகாப்பு நடவடிக்கைகளை கடுமையாக்க வேண்டி ஏற்பட்டது. நாட்டில் மீண்டும் வகுப்புவாத பதற்றம் அதிகரித்தது. தமது சொந்த நாடுகளில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி அங்கிருந்து தப்பித்து வந்து தற்காலிக அடைக்கலம் தேடிய அகதிகள் மற்றும் புகலிடக் கோரிக்கையாளர்களும், 'தீவிரவாத முஸ்லிம்கள்' என்று சந்தேகிக்கப்பட்டு விரோதத்தையும் தாக்குதல்களையும் எதிர்கொண்டனர். பலர் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர் மற்றும் அதிர்ச்சிகரமான மற்றும் அவமானகரமான அனுபவங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர்[54]

## பொருளாதார பாதிப்பு: தீமை

இலங்கையின் சுற்றுலாத் துறையானது அதன் மிகப்பெரிய தொழில்துறைகளில் ஒன்றாகும் மற்றும் முக்கிய வருமான ஆதாரமாக உள்ளது, மேலும் வெளிநாட்டு முதலீட்டிற்கு மிகமுக்கியமானது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.[55] 2019ஆம் ஆண்டில் பார்வையிடுவதற்கு சிறந்த நாடு இலங்கை என 2018ஆம் ஆண்டில் லோன்லி பிளானட் அறிவித்தது.[56] இது சுற்றுலாத்துறையிலிருந்து மட்டும் நாடு உருவாக்கக்கூடிய சாத்தியமான வருவாயை எடுத்துக்காட்டுகிறது. எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இந்த தொழிற்துறையை மிகவும் மோசமாக பாதித்தது.

2019ஆம் ஆண்டில், இலங்கை 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகையை எட்டிவிடும் என மதிப்பிட்ட சுற்றுலாத்துறை அதிகாரிகள் புதிய சாதனையை நிலைநாட்டும் என கணித்தனர்.[57] எவ்வாறாயினும், அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் உள்ளிட்ட சுமார் 37 நாடுகள்,[58] [59] [60] பயங்கரவாதம் மற்றும் அதிகரித்த பதற்றம் காரணமாக தங்கள் குடிமக்களை எச்சரிக்கையுடன் பயணிக்குமாறு பயண ஆலோசனைகளை வழங்கிய நிலையில் (தற்காலிக), இலங்கையின் சுற்றுலாத்துறை பெரும் சரிவை சந்தித்தது. வருடத்தின் ஆரம்பத்தில் நாட்டிற்கு கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப்பயணிகள்

வருகைதந்த போதும் (நாளொன்றிற்கு சராசரியாக 7600 சுற்றுலாப் பயணிகள்), ஏப்ரல் மாதம் (நாளொன்றிற்கு 1700 சுற்றுலாப் பயணிகள் வருகை) நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பின்னர் இது வெகுவாகக் குறைந்தது.[61] 2019ஆம் ஆண்டு இலங்கைக்கு 1.9 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் மட்டுமே வந்துள்ளனர். இது அதற்கு முந்தைய வருடம் பதிவான 2.3 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் என்ற எண்ணிக்கையிலிருந்து பாரிய சரிவாக பதிவாகியுள்ளது.[62] அதாவது 18 வீதமான சரிவைக் குறிக்கிறது. இதனால் சுற்றுலாத்துறையின் வருமானம் 17.7 வீதத்தால் குறைவடைந்துள்ளது.[63]

சுற்றுலா இலங்கையின் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் சங்கத்தின் கூற்றுப்படி, பல வணிகங்கள் கணிசமான இழப்பைச் சந்தித்ததால், தமது ஊழியர்களை பணிநீக்கம் செய்துவிட்டனர்.[64] இது சுற்றுலாவை ஆபத்தான மற்றும் நிலையற்ற தொழிற்துறையாக கருதச் செய்ததால், இத்துறையில் நுழைவதற்கு தயக்கம் காட்டப்பட்டது. இது கடுமையான தொழிலாளர் பற்றாக்குறையை ஏற்படுத்தியதோடு, திறமையான தொழிலாளர்கள் இல்லாமையால் இத்தொழிற்துறையில் நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தும்.[65] இதன் தாக்கம் முதன்மையாக சுற்றுலாத்துறையில் இருந்தாலும், விமான போக்குவரத்து சேவைகள், உள்நாட்டு போக்குவரத்து, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், தங்குமிடம், உணவு மற்றும் சிற்றுண்டி சேவைகள், ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு மற்றும் விவசாயம் உள்ளிட்ட பல துறைகளில் இது பாதிப்பை ஏற்படுத்தியது.[66]

தாக்குதல்களைத் தொடர்ந்து, வெளிநாட்டு முதலீடுகள் திரும்பப் பெறப்பட்டதாலும், நாட்டின் மீதான எதிர்மறையான பார்வை பரவலாக்கப்பட்டதாலும், இலங்கை ரூபாயின் பெறுமதி சரிவை எதிர்நோக்கியது.[67] மேலும், விலைச் சுட்டெண்கள் மற்றும் சந்தை மூலதன வீழ்ச்சியுடன் கொழும்பு பங்குச் சந்தை பின்னடைவைச் சந்தித்தது. நிதி செயற்திறன் மோசமடைந்தது, நிவாரணப் பொதிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கச் செலவுகள் அதிகரித்தன.[68] எனவே, 2019இல் நாட்டின் பொருளாதாரத்தை ஏனைய காரணிகளும் பாதித்தாலும், குறைந்த வருவாய், வேலைவாய்ப்பு சவால்கள், அதிகரித்த நாணய மாற்று விகிதங்கள் மற்றும் அதிகரித்த செலவினங்களுக்கு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் கணிசமாக பங்களித்தன என்பது தெளிவாகிறது.

## சட்டக் கண்ணோட்டம்: வழக்குப் பதிவு

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக 40இற்கும் மேற்பட்ட குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. (விரிவான தரவினைப்பெற்றுக்கொள்ள இணைப்பு 1 மற்றும் 2ஐப் பார்க்கவும்). எனினும், எந்தவொரு வழக்கிலும் தண்டனை வழங்கப்படவில்லை. இந்த வழக்குகளில் தொடர்புடையவர்கள் மீது, ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புகளை நேரடியாக நடத்தியமை, தாக்குதல்களுக்கு உதவியமை, அவற்றைத் தடுக்கத் தவறியமை, அல்லது தீவிரவாதக் கருத்துக்கள் போன்ற கருத்துக்களை பரப்புவதன் மூலம் மறைமுகமாக இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற காரணமாக அமைந்தமை ஆகியன அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பெரும்பாலான வழக்குகள் இன்னும் நடைபெற்று வருகின்றன .சில முக்கிய வழக்குகளில் முன்னேற்றம் குறித்த விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. வழக்குகளின் ஆரம்ப நிலைகள் தொடர்பான விபரங்களை 'ஈஸ்டர் தாக்குதல்கள் பற்றிய நீதிமன்ற வழக்குகளின் 11 முக்கிய அம்சங்கள்" என்ற தலைப்பில் CSR முன்னர் வெளியிட்ட அறிக்கையில் பெற்றுக்கொள்ளலாம்.

தாக்குதல் நடத்தப்பட்டு 5வருடங்கள் கடந்துள்ள போதிலும், இன்று வரை யாரும் பொறுப்புக் கூறவில்லை. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முக்கிய 12 .வழக்குகள் உள்ளன குறித்த வழக்குகள் பற்றிய விரிவான தகவல்களைப் பெற்றுக்கொள்ள, 'ஈஸ்டர் தாக்குதல்கள் பற்றிய நீதிமன்ற வழக்குகளின் 11 முக்கிய அம்சங்கள்" என்ற தலைப்பில் வெளியான CSRஇன் அறிக்கையை பார்வையிடவும்.

1. *உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் குற்றம் சாட்டப்பட்ட 25 நபர்களுக்கு எதிரான முக்கிய குற்றவியல் வழக்கு*- HC (TAB) 2972/21

குற்றவியல் வழக்கு எண் HC 2972 (TAB). 2019 ஏப்ரல் 21 அன்று நடந்த அனைத்து குண்டுவெடிப்புகள் தொடர்பாக நௌஃபர் மௌலவி உட்பட 25 குற்றவாளிகளை

உள்ளடக்கியது. இது தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான குற்றவியல் வழக்காகும். இந்த வழக்கில், சதி மற்றும் தாக்குதலுக்கு உதவி செய்தமை உள்ளிட்ட 23,270 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரிக்கைகள் 2022 ஜனவரி 12 அன்று நீதாய மன்றில் (Trial-at-Bar) சமர்ப்பிக்கப்பட்டன.[69] சிறைச்சாலை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 17வது குற்றவாளி மரணமடைந்ததையடுத்து, தற்போது 24 குற்றவாளிகள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. தமிழ் பேசும் வழக்கறிஞர்கள் பற்றாக்குறை, குற்றப்பத்திரிகைகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள் கிடைக்காதது போன்ற காரணங்களால் வழக்கு விசாரணை தாமதமானது. இறுதியாக, இந்த வழக்கு 2023 ஒக்டோபர் 10ஆம் திகதியன்று விசாரணைக்கு வந்தது.[70] விசாரணையை ஆரம்பிக்க ஏன் இவ்வளவு காலம் சென்றது என்பதை ஆராய்வது ஒரு முக்கியமான கேள்வியாகும். 44 நாட்கள் நடைபெற்ற விசாரணையில், குண்டுவெடிப்பு தொடர்பான குற்றச்சாட்டுகளை பாதுகாப்புத் தரப்பு ஒப்புக்கொள்ளவில்லை. இதன் விளைவாக, உயிர்த்த ஞாயிறு அன்று தற்கொலை குண்டுதாரிகளே தாக்குதல்களை நடத்தினர் என்பதை நிரூபிக்க சாட்சிகளை அழைக்க வேண்டியிருந்தது.

பெப்ரவரி 13ஆம்திகதி நிலைவரப்படி, இந்த வழக்கு 102வது நாள் .விசாரணையில் உள்ளதுதற்போது, 11ஆவது சந்தேகநபர் அளித்த இரண்டு வாக்குமூலங்களை அரசு தரப்பு சாட்சியமாக கொண்டு வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலங்கள் சுதந்திரமாகவும் தானாக முன்வந்தும் செய்யப்பட்டதா என்பதைச் சரிபார்க்க இரண்டு தனித்தனி

வழக்கு எண்: HC (TAB) 2972.׃.21
குற்றஞ்சாட்டப்பட்டவர் - நௌபர் மௌலவி மற்றும் 23 பேர்
நீதிமன்றம்: கொழும்பு மேல் நீதிமன்றம்
அடுத்த திகதி: ஜனவரி 30ஆம் திகதி 2025
தற்போதைய நிலை: விசாரணை நடைபெறுகின்றது

விசாரணைகள் உள்ளன .இவை முக்கியமானவை, ஏனென்றால் குற்றஞ்சாட்டப்பட்ட மற்ற நபர்களின் குற்றத்தை நிரூபிக்க ஒப்புதல் வாக்குமூலங்கள் உதவக்கூடும்.

## 2. உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்க தவறியமைக்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபருக்கு எதிரான வழக்கு – HC/TAB/2899/21 & HC/TAB/2900/21

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களைத் தடுக்கத் தவறியமை மற்றும் கடமைகளைப் புறக்கணித்தமை ஆகிய (ஏனைய விடயங்களுடன்) விடயங்களுக்காக 2021ஆம் ஆண்டு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் குற்றஞ்சாட்டப்பட்டனர். இந்த வழக்குகள் கொழும்பு மேல் நீதிமன்றில் உள்ள நீதாயங்களில் தனியத்தனியாக விசாரிக்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்ட இருவரும் 2022 பெப்ரவரி மாதம் 18ஆம் திகதியன்று, பாதுகாப்பு தரப்பிலிருந்து சாட்சியங்களை அழைக்காமலேயே நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.[71] இந்த வழக்குகள் ஒவ்வொன்றிலும் 855 குற்றச்சாட்டுகள் இருந்தபோதிலும், குற்றவியல் சட்டத்தின் பிரிவு 102 இன் கீழ், குற்றம் செய்வதற்கு தூண்டிவிடப்பட்டதா என்பது முக்கிய கேள்வியாக இருந்தது. தூண்டிவிடுபவர், 'எந்தவொரு செயலின் மூலமாகவோ அல்லது சட்ட விரோதமான புறக்கணிப்பால், அந்த காரியத்தைச் செய்வதற்கு வேண்டுமென்றே உதவி செய்பவராக' வரையறுக்கப்படுகிறார். அவர்கள் தவறிழைத்த குற்றவாளிகளாகக் கருதப்படலாம் என்பதை நிரூபிப்பதற்கான கட்டாயமான மற்றும் உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை என்பதே மன்றின் நிலைப்பாடாக இருந்தது.[72] ஒவ்வொரு வழக்கிலும் சுமார் 1200 சாட்சிகள் பெயரிடப்பட்டிருந்தாலும், விசாரணையில் சாட்சியமளிக்க 6-7 சாட்சிகள் மட்டுமே அழைக்கப்பட்டனர், இது மிகச் சிறிய எண்ணிக்கையாகும்.[73]

இந்த இரண்டு வழக்குகளும் சட்டமா அதிபரால் உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்கள் S.C. TAB எண்.02/23 மற்றும் S.C.TAB எண். 03/23 என்ற இலக்கத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. 2023ஆம் ஆண்டு ஜூலை 4ஆம் திகதி முதல் ஐந்து நீதிபதிகள் கொண்ட மன்றில் வழக்கு வாதிடப்பட்டு 2023 செப்டெம்பர் 8ஆம் திகதி விசாரணை முடிவடைந்தது. உச்ச நீதிமன்ற நீதிபதிகள் பிப்ரவரி 18,

வழக்கு எண்: HC/TAB/2900/21 மற்றும் S.C.TAB No. 03/23
குற்றஞ்சாட்டப்பட்டவர்: பூஜித் ஜயசுந்தர
நீதிமன்றம்: மேல் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம்
தற்போதைய நிலை:. உயர் நீதிமன்ற தீர்ப்பு இங்கே காணப்படுகின்றது

2022 அன்று பட்டியில் விசாரணை உத்தரவை தள்ளிவைக்க வேண்டும் என்றும், வழக்கை தற்காப்புக்காக அழைக்க வேண்டும் என்றும் முடிவு செய்தனர். குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை தீர்மானிக்க அனைத்து ஆதாரங்களையும் கவனமாக மறுபரிசீலனை செய்ய நீதிமன்றம் கடமைப்பட்டுள்ளது, நியாயமான சந்தேகத்திற்கு அப்பால் ஆதாரத்தின் தரத்தைப் பயன்படுத்துகிறது. விசாரணை முடிந்த பின்னரே குற்றத்தை தீர்மானிக்க வேண்டும். குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்கள் வாதத்தை முன்வைத்து, மீதமுள்ள நடவடிக்கைகளைத் தொடருமாறு கூறி, விசாரணையைத் தொடர உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

3. *உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்கு* – SC FR 163/2019, SC FR 165/2019, SC FR 166/2019, SCFR 184/2019, SC FR 188/2019, SC FR 191/2019, SC FR 193/2019, SC FR 195/2019, SC FR 196/2019, SC FR NO. 197/19, SC FR 198/2019, SCFR 293/2019

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைத் தடுக்கத் தவறியதாக குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக 12 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. மனுதாரர்கள் தாக்கல் செய்த அனைத்து மனுக்கள் தொடர்பாகவும் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது.[74] மனுதாரர்கள் தாக்கல் செய்த அனைத்து மனுக்கள் தொடர்பாகவும் 2023 ஜனவரி 12ஆம் திகதியன்று உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியது. அடிப்படை உரிமை மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதிவாதிகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தடுக்கத் தவறியதாகவும், இதன் விளைவாக, அவர்கள் மனுதாரர்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் எனவும்' உயர்' நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க இந்த நிதி அனைத்தும் சேகரிக்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. 2023 ஒப்டோபர் 30ஆம் திகதியின் நிலவரப்படி, பின்வரும்

தொகை பெறப்பட்டது. சுமார் இரண்டு வருடங்களுக்குப் பின்னர், அனைத்து எதிர்மனுதாரர்களுக்கும் முழுத் தொகையையும் செலுத்தியுள்ளனர்

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதியின் நிலைவரப்படி, பின்வரும் தொகைகள் நிதியில் வரவு வைக்கப்பட்டுள்ளன.

| பிரதிவாதிகள் | வழங்குமாறு உத்தரவிடப்பட்ட தொகை |
|---|---|
| அரசாங்கம் | ரூ. 1 மில்லியன் |
| திரு ஹேமசிறி பெர்னாண்டோ | ரூ. 50 மில்லியன் |
| திரு பூஜித் ஜயசுந்தர | ரூ. 75 மில்லியன் |
| கௌரவ மைத்திரிபால சிறிசேன | ரூ. 100 மில்லியன் |
| திரு. சிறிசேன மெண்டிஸ் | ரூ. 10 மில்லியன் |
| திரு. நிலந்த ஜயவர்தன | ரூ. 75 மில்லியன் |
| மொத்தம் | ரூ. 311 மில்லியன் |

மூலம்- https://reparations.gov.lk/

2023[75] ஜூலை 12ஆம் திகதி காலக்கெடுவாக அமைந்திருந்த போதிலும் ஏப்ரல்21 2024க்குள் 6 பேரில் 2 பிரதிவாதிகள் மட்டுமே இழப்பீட்டுத் தொகையை முழுமையாக செலுத்தியுள்ளனர் என்பது தெளிவாகிறது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் முறையே 100 மில்லியனில் 15 மில்லியனையும் 75 மில்லியனில் 1.7 மில்லியனையும் மட்டுமே செலுத்தியுள்ளனர்.

கடந்த ஜூலை 15ஆம் திகதி , சிறிசேன, ஜெயசுந்தர மற்றும் ஜெயவர்த்தன ஆகியோரின் நிலுவைத் தொகையை 2024 ஆகஸ்ட் 30ஆம் திகதிக்குள் செலுத்தி முடிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. அவ்வாறு செய்யத் தவறினால், அவர்கள் மீது 20ஆம் செப்டம்பர் 2024திகதிக்குள் நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்படும் என்றும் கூறப்பட்டது. தனது எஞ்சிய கொடுப்பனவை செலுத்த மைத்திரிபால சிறிசேன வருட கால 6 நீடிப்பினை கோரியிருந்த போதிலும், இந்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்தது. இதற்கு மேலதிகமாக, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக 6 மாதங்களுக்குள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதற்கான முன்னேற்றம் மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவதானித்து நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. இந்த தீர்ப்புக்கு இணங்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளை reparations.gov.lk இல் காணலாம்.[76]

மேற்கண்ட வழக்குகளில் உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளின் பிரகாரம், இழப்பீடுகளுக்கான அலுவலகம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. குறித்த நடவடிக்கைகளில் ஒன்றாக, 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019 ஏப்ரல் - பாதிக்கப்பட்டோருக்கான நிதியம்' என்ற தலைப்பில், இலங்கை வங்கியின் இராஜகிரிய கிளையின், 0090167960 என்ற கணக்கு இலக்கத்தில், 2023 ஜனவரி 19ஆம் திகதி முதல் அமுலுக்கு வகையில் பாதிக்கப்பட்டோருக்கான நிதியத்தை ஸ்தாபிப்பது முக்கியமானதாகும்.[77] நிதியிலிருந்து பணம் வழங்குவது குறித்த மேலதிக தகவல்கள், 'இழப்பீடுகள்' பிரிவில் பகுப்பாய்வு செய்யப்படும்."

வழக்கு எண்கள்: SC FR 163/2019, SC FR 165/2019, SC FR 166/2019, SCFR 184/2019, SC FR 188/2019, SC FR 191/2019, SC FR 193/2019, SC FR 195/2019, SC FR 196/2019, SC FR NO. 197/19, SC FR 198/2019, SCFR 293/2019
குற்றஞ்சாட்டப்பட்டவர்: அரசாங்கம்இ மைத்திரிபால சிறிபாலஇ ஹேமசிறி பெர்ணான்டோஇ பூஜித் ஜயசுந்தரஇ சிறிசேன மெண்டிஸ் மற்றும் நிலந்த ஜயவர்தன
நீதிமன்றம்: உயர் நீதிமன்றம்
தற்போதைய நிலை:. பிரதிவாதிகள் இழப்பீட்டினை செலுத்தவில்லை. மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 4. *ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் ஏனையோருக்கு எதிரான வழக்கு*- HC 78/2021

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குண்டுதாரிகளில் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்த சேவ் தி பேர்ல்ஸ் தொண்டு நிறுவனத்துடன் கொண்டிருந்த தொடர்புக்காக வழக்கறிஞர் ஹெஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. எனினும் ஹெஜாஸிற்கு எதிரான ஆதாரங்கள் பலவீனமாக உள்ளன. அவரது கைது தன்னிச்சையானது, உரிய நடைமுறை இல்லாதது மற்றும் உத்தரவுகள் மற்றும் நெறிமுறைகளை மீறியதென

வழக்கு எண்: HC 78/2021
குற்றஞ்சாட்டப்பட்டவர்: ஹெஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் மொஹமட் ஷகீல்
நீதிமன்றம்: புத்தளம் மேல் நீதிமன்றம்
அடுத்த திகதி : மே மாதம் 2024
மே மாதம் 2 மற்றும் 9ஆம் திகதி 2025
தற்போதைய நிலை: விசாரணை நடைபெறுகின்றது

பரவலாக கண்டனம் தெரிவிக்கப்பட்டது.[78] பொய்யான குற்றச்சாட்டுகள் மற்றும் எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கையிலும் அவரை தொடர்புபடுத்துவதற்கான ஆதாரங்கள் இல்லாததால் அவரை விடுவிக்க வேண்டுமென, 23 அமைப்புகளும் 75 நபர்களும் கோரிக்கை விடுத்தனர்.[79] குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் உயர்நீதிமன்றத்தில் அவர் அளித்த முந்தைய வாக்குமூலங்கள் ஜோடிக்கப்பட்டவை என்றும், அவர் பொய் சொன்னதாகவும் அரசுத் தரப்பு முக்கிய சாட்சி ஒப்புக்கொண்டதையடுத்து, 2023 ஒக்டோபர் 9ஆம் திகதி வழக்கின் முக்கிய திருப்புமுனையாக காணப்பட்டது.[80] 2024 ஜனவரி 16ஆம் திகதி, கத்தோலிக்க மதகுருமார்களுடன் நீதிமன்றத்திற்குச் சென்று, ஹெஸ்புல்லா தனது ஒற்றுமையை பிரதிபலித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடையவராக ஹெஸ்புல்லாவை குற்றஞ்சாட்டுதல் மற்றும் வழக்குத் தொடுப்பதில் சட்டத்தரணிகளின் பங்கை கத்தோலிக்க திருச்சபை பெரிதும் சந்தேகிக்கின்றது என்று இது அறிவுறுத்துகிறது.[81] இவ்வாறான கரிசனைகள் காணப்படுகின்றபோதும், வழக்கு விசாரணை தற்போது தொடர்கின்றது. அடுத்த வழக்கு விசாரணை 2024 மே 17ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

5. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக தனிப்பட்ட முறைப்பாடு - 23084/22

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பட்ட முறைப்பாடு இதுவாகும். சஹ்ரான் ஹாசிம் மற்றும் அவரது ஆதரவாளர்களை கைது செய்ய முப்படைகள் மற்றும் Æ அல்லது பொலிஸாருக்கு உத்தரவிடாமை, கண்காணிப்பை மேற்கொள்ள தவறியதாகவும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் போது ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் உயிரிழப்புகளை தடுக்க தவறியதாகவும், பாதுகாப்பு அமைச்சராக இருந்து அவரது சட்டப்பூர்வ கடமைகளை புறக்கணித்துள்ளார் என்றும் அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அலட்சியத்தால் மரணம் மற்றும்Æஅல்லது கடுமையான காயத்தை ஏற்படுத்திய குற்றவியல் சட்டக் குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் காரணமாக, 2022 செப்டெம்பர் 16 அன்று நீதவான் நீதிமன்றம் அவருக்கு அழைப்பாணை பிறப்பித்தது. 2023 மார்ச் 17ஆம் திகதி இறுதியாக விசாரணை நடைபெற்றதோடு, எழுத்தாணை வழக்கு முடிவு செய்யப்படும் வரை தற்போது விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

வழக்கு எண்: WRIT 354/22
பிரதிவாதிகள் : கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றின் கௌரவ நீதவான் மற்றும் பதிவாளர்

நீதிமன்றம்: கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம்

அடுத்த திகதி : 2024 மே 14

தற்போதைய நிலை: முதலாவது தடவையாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது

வழக்கு எண்: 23084/22
குற்றஞ்சாட்டப்பட்டவர்: மைத்திரிபால சிறிசேன (முன்னாள் ஜனாதிபதி)
நீதிமன்றம்: கோட்டை நீதவான் நீதிமன்றம்
தற்போதைய நிலை: ரிட் வழக்கு முடிவு செய்யப்படும் வரை தற்போது விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

C

### 6. *மாவனெல்ல பகுதியில் புத்தர் சிலைக்கு சேதம் விளைவிக்கப்பட்டமை குறித்த வழக்கு-* TAB 4485/21

மாவனெல்ல பகுதியைச் சுற்றியுள்ள புத்தர் சிலைகள் 2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 மற்றும் 26ஆம் திகதிளுக்கு இடைப்பட்ட காலத்தில் சேதப்படுத்தப்பட்டன. இது குறித்த கைதுகள் இடம்பெற்றிருந்தாலும், இந்த நாசவேலைக்கு காரணமாக செயற்பட்டவர் யார் என்று அப்போது அடையாளம் காணப்படவில்லை. பின்னர், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தற்கொலை குண்டுதாரிகளில் ஒருவரான சஹ்ரான் ஹசிம் என்பவரே இதன் பின்னணியில் இருந்துள்ளார் என கண்டுபிடிக்கப்பட்டது.[82] பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 18 குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு 16 பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டு, வழக்கு 2022 ஜூன் 17ஆம் திகதியன்று விசாரணைக்கு வந்தது.[83] சட்டப்பூர்வ பிரதிநிதித்துவம் இல்லாமை, குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜராகாமை மற்றும் நீதிபதியின் விடுமுறை போன்ற காரணங்களால் நீதிமன்ற நடவடிக்கைகள் தாமதமாகின. எனினும், குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகளை குறைத்ததற்காக குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து 2023ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதி வழக்கு முடிவுறுத்தப்பட்டதோடு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு இடைநிறுத்தப்பட்ட தண்டனைகள் வழங்கப்பட்டன.[84]

வழக்கு எண்: TAB 4485/21
குற்றஞ்சாட்டப்பட்டவர்: 16 நபர்கள்
நீதிமன்றம் : கேகாலை மேல் நீதிமன்றம்
தற்போதைய நிலை: வழக்கு நிறைவடைந்தது

## 7. வனாத்தவில்லு பயிற்சி முகாம் மற்றும் வெடிகுண்டு வழக்கு – புத்தளம் /TAB/107/2021

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பயிற்சி முகாம் மற்றும் வெடிபொருட்கள் வனாத்தவில்லுவில் கண்டுபிடிக்கப்பட்டமை மற்றும் அதனுடன் தொடர்புடைய 6 பேருக்கு எதிரான வழக்கு இதுவாகும். இந்த பயிற்சி முகாம் 2019 ஜனவரி 16ஆம் திகதியன்று குற்றப்புலனாய்வு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு வகையான தற்கொலை மற்றும் தாக்குதல் குழுக்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக இந்த முகாம் அமைக்கப்பட்டது என்றும், அது சஹரானுடன் தொடர்புடையது என்றும் அவர்கள் அறிந்தனர். சஹரான் அணுகக்கூடிய இந்த வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருந்திருந்தால், அது மிகப் பெரிய படுகொலைக்கு வழிவகுத்திருக்கும்.[85] வழக்கு விசாரணை தற்போது ஆரம்பமாகியுள்ளதோடு, குற்றஞ்சுமந்தப்பட்ட மூன்றாவது நபரின் வாக்குமூலம் தானாக முன்வந்து வழங்கப்பட்டதா அல்லது கட்டாயப்படுத்தப்பட்டதா (voir dire inquiry) என்பதை சரிபார்க்க மேலதிக விசாரணை நடைபெறுகின்றது.

வழக்கு எண்: புத்தளம் /TAB/107/2021
குற்றஞ்சாட்டப்பட்டவர்: 6 நபர்கள்
நீதிமன்றம்: புத்தளம் மேல் நீதிமன்றம்
அடுத்த திகதி: 28 மற்றும் 29 மே, 25,26, மற்றும் 27 ஜூன் மற்றும் 16, 17, மற்றும் 18 ஜூலை 2024. ஜனவரி 2025
தற்போதைய நிலை: வாக்குமூலம் தானாக முன்வந்து வழங்கப்பட்டதா அல்லது கட்டாயப்படுத்தப்பட்டதா (voir dire inquiry) என்பதை சரிபார்க்க மேலதிக விசாரணை நடைபெறுகின்றது

## 8. அஹ்னாப் ஜெசீமிற்கு எதிரான வழக்கு- HC 148/2021

இளம் கவிஞரான அஹ்னாப் ஜெஸீம் என்பவர் எழுதிய 'நவரசம்' என்ற புத்தகத்தில் தீவிரவாத கருத்துக்கள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டு, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது.[86] பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒன்றரை வருடங்களுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெசீம் பிணையில் விடுவிக்கப்பட்டார்.[87] தடுப்புக்காவலில் இருந்த காலத்தில், சட்டத்தரணிகளை அணுகுவதற்கான வாய்ப்பு அஹ்னாப்பிற்கு வழங்கப்படவில்லை மற்றும் ஒரு அறிக்கையை கொடுத்து அதன் உள்ளடக்கத்தை படித்து புரிந்துகொள்ள வாய்ப்பு வழங்கப்படாமல் கையெழுத்திடுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்.[88] அஹ்னாப் தொடர்பாக நியாயமான விசாரணை நடைபெறாமை, உரிய செயல்முறை

முன்னெடுக்கப்படாமை மற்றும் சட்ட ஆலோசனைகள் மறுக்கப்பட்டமை மற்றும் அவர் மிகவும் சுகாதாரமற்ற சூழலில் தடுத்துவைக்கப்பட்டமை போன்ற காரணங்கள் சர்வதேச அளவில் கரிசனையை தோற்றுவித்தது.[89] 2022 நவம்பர் 16ஆம் திகதி, விசாரணைக்கு முந்தைய நடவடிக்கைகள் ஆரம்பமாகின. 2023 டிசம்பர் 12ஆம் திகதி ஐந்து அரசுத் தரப்பு சாட்சிகளிடம் விசாரணை நடத்தப்பட்ட பின்னர், போதிய ஆதாரங்கள் இல்லாததால் ஜெசீமை நீதிமன்றம் விடுவித்தது.

வழக்கு எண்: HC 148/2021
குற்றஞ்சாட்டப்பட்டவர்: : அஹ்னாப் ஜெஸீம்
நீதிமன்றம் : புத்தளம் மேல் நீதிமன்றம்
தற்போதைய நிலை: வழக்கு முடிவுறுத்தப்பட்டது

9. *உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் ஏற்பட்ட சேதங்களை மீட்பதற்கான வழக்கு* 16235/MR

ஆறு பேருக்கு எதிராக குற்றஞ்சாட்டப்பட்டு பதிவுசெய்யப்பட்ட இந்த வழக்கு, 2022 டிசம்பர் மாதம் 15ஆம் திகதி நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. முன்விசாரணை கட்டத்தில் வழக்கு தற்போது உள்ளது.

வழக்கு எண்: 16235 M
குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் : மைத்திரிபால சிறிசேனஇ ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கஇ ஹேமசிறி பெர்னாண்டோஇ பூஜித் ஜயசுந்தரஇ நிலந்த ஜயவர்தனஇ சட்டமா அதிபர்
நீதிமன்றம்: நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றம்
அடுத்த திகதி : 2024 ஜூன் 28 4ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025
தற்போதைய நிலை: முன்விசாரணை

10. *நிலந்த ஜயவர்தனவிற்கு எதிரான எழுத்தாணை வழக்கு* - Writ 143/24

உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்புகள் அரச புலனாய்வு சேவையின் குறிப்பிடத்தக்க தோல்வியை அம்பலப்படுத்தியது. 2019 ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுவெடிப்புகளுக்கு காரணமான அலட்சியத்திற்கு அரச புலனாய்வுப் பிரிவின் அப்போதைய தலைவர் நிலந்த ஜயவர்தன நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டுமென ஆதாரங்களை முன்வைத்து, 2022 ஏப்ரல் 20ஆம்

திகதி பொலிஸ் மா அதிபருக்கு சமூக சமய நடுநிலையம் முறைப்பாடு செய்தது.

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தகவல் கிடைத்த போதிலும், அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்காக உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு நிலந்த ஜயவர்தனவை கைது செய்யுமாறு, தமது முறைப்பாட்டில் சமூக சமய நடுநிலையம் வலியுறுத்தியுள்ளது. இது, குற்றவியல் சட்டத்தின் பிரிவு 100 (iii) இன் கீழ் வருகிறது.

குறித்த முறைப்பாட்டிற்கு எவ்வித பதில்களும் கிடைக்காத நிலையில், 2024 மார்ச் முதலாம் திகதி, பொலிஸ் மா அதிபர், நிலந்த ஜயவர்தன மற்றும் சட்டமா அதிபருக்கு எதிராக எழுத்தாணை மனுவை சமூக சமய நடுநிலையம் தாக்கல் செய்தது. ஏனைய கோரிக்கைகளுடன், பின்வரும் விடயங்களையும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் கோரினர் -

i. நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக குற்றவியல் விசாரணைகள் மற்றும்/அல்லது நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
ii. ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புகள்/பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல்
iii. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்கும்/அல்லது செயற்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுத்தல்

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாலும், இந்த வழக்கின் அழுத்தத்தினால் பிரதிவாதி இடைநிறுத்தப்பட்டதாலும் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணை தொடர்பான நிவாரணத்தை தொடரப்போவதில்லை என மனுதாரர்களின் சட்டத்தரணிகள் கடந்த நவம்பர் மாதம் 13ஆம் திகதி நீதிமன்றில் அறிவித்தனர். தற்போது, மனுதாரர்கள் குற்றவியல் வழக்கு தொடர்பான இரண்டாவது நிவாரணத்தைத் தொடர்ந்துள்ளனர் மற்றும் வழக்கு, விசாரணையின் ஆரம்ப கட்டத்தில் உள்ளது. இந்த விவகாரம் ஆதரவாக இருப்பதால், வழக்கு இருக்கின்றதா என்பதை நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியது அடுத்த கட்டமாகும்.

வழக்கு எண்: Writ 143/24
பிரதிவாதி: நிலந்த ஜயவர்தன

நீதிமன்றம் : கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம்

அடுத்த திகதி: 2024 மே 28 27ஆம் திகதி பெப்ரவரி மாதம் 2025
தற்போதைய நிலை: மீள விசாரிக்கப்படவுள்ளது

## 11. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு எதிராக தகவல் அறியும் உரிமை வழக்கு - CA RTI/11/2023

சமூக சமய நடுநிலையம் சார்பில், பொது பாதுகாப்பு அமைச்சிடம் ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தன தகவல் அறியும் உரிமை விண்ணப்பத்தை தாக்கல் செய்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான தவறுகளுக்காக தற்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் உட்பட சில பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை தருமாறு இந்த தகவல் விண்ணப்பத்தில் கோரப்பட்டது. இதற்கான பதில் சமூக சமய நடுநிலையத்திற்கு கிடைக்காத காரணத்தால், தகவல் அறியும் ஆணைக்குழுவில் மேன்முறையீடு செய்யப்பட்டது. 2023 நவம்பர் மாதம் 24ஆம் திகதி, அமைச்சுக்கு சாதகமான வகையில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. தகவல் அறியும் ஆணைக்குழுவின் தீர்மானம் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. தற்போது இது தொடர்பான வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளதோடு, பிரதிவாதிகள் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டியுள்ளது.

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் தாக்கல் செய்த இடையீட்டு ஆவணங்களுக்கு, தற்போது மனுதாரர்கள் ஆட்சேபனைகளை தாக்கல் செய்து வருகின்றனர். தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு கோரிய தகவல்

வழக்கு எண்: CA RTI/11/2023
பிரதிவாதி: பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
நீதிமன்றம்: கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம்
அடுத்த திக்கதி: 22ஆம் திகதி ஜனவரி மாதம் 2025
தற்போதைய நிலை : *பிரதிவாதிகள் நீதிமன்றத்திற்கு வருவதற்கு நிலுவையில் உள்ளது*

இல்லை என்ற அமைச்சின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சிற்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

## யாரை குற்றம் சொல்வது?

நாட்டின் சமூக பொருளாதார தாக்கத்தையும், ஆயிரக்கணக்கானோர் அனுபவிக்கும் அளவிட முடியாத இழப்பையும் மறுக்கமுடியாது. ஆனால், இவை அனைத்திற்கும் யார் பொறுப்பு? இதற்கான நீதி எவ்வாறு அமைய வேண்டும்?

2019 ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர்களை கைது செய்து காவலில் வைக்க பாதுகாப்புப் படையினருக்கு அதிகாரம் வழங்கும் அவசரகால விதிமுறைகளை ஜனாதிபதி வெளியிட்டார்.[90] அடுத்த வாரமே சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டனர்,[91] மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட இரண்டு முக்கிய குழுக்களிடம் ஆயுதப் பயிற்சி பெற்றதாகவும், போதனை வகுப்புகளில் கலந்துகொண்டதாகவும் கூறப்படும் பெரும் எண்ணிக்கையானவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.[92] NTJ மற்றும் JMI ஆகியவற்றுடன் தொடர்புடைய பல கைதுகள் காணப்பட்ட போதிலும், கதையில் ஆழமான விபரிப்புகள் உள்ளதா மற்றும் தாக்குதல்களுக்குப் பின்னால் உள்ள உண்மையான சூத்திரதாரி யார் என்பது பற்றிய கேள்விகள் எழுந்தன.

,[93]

குண்டுவெடிப்புகளை விசாரிப்பதற்காக விஜித் மலல்கொட தலைமையிலான ஜனாதிபதி விசாரணைக் குழு, ஜனக் டி சில்வா தலைமையிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மற்றும் பாராளுமன்ற தெரிவுக்குழு உட்பட பல குழுக்கள் நியமிக்கப்பட்டன..

ஜனாதிபதி விசாரணைக் குழுவின் அறிக்கையில் நிறைவேற்றுச் சுருக்கம் மற்றும் பரிந்துரைகள் மட்டுமே வெளியிடப்பட்டதால், அறிக்கை பகுதியளவில் மட்டுமே வெளியிடப்பட்டது (அதனை இங்கு பெற்றுக்கொள்ள முடியும). ஆம் 10 2019ஆம் ஆண்டு ஜூன்திகதி அறிக்கை

சமர்ப்பிக்கப்பட்டாலும், அது பகிரங்கப்படுத்தப்படவில்லை என்பதால் இது சிக்கலாக உள்ளது .CSR இன் செய்திக்குறிப்பு முழு அறிக்கையையும் வெளியிடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. காரணம், அதில் உள்ள ஆதாரங்கள், தாக்குதலின் பின்னணியில் உள்ள சதியை வெளிப்படுத்தக்கூடும். 2023ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதியன்று, CSR தாக்கல் செய்த மேன்முறையீட்டை விசாரித்து, 2023பெப்ரவரி ஆம் 9திகதிக்குள் ஜனாதிபதி விசாரணைக் குழுவின் அறிக்கையை பகிரங்கப்படுத்துமாறு தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு, ஜனாதிபதி செயலகத்திற்கு உத்தரவிட்டது. எனினும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதற்கு, வெளியிடப்பட்ட அறிக்கைகளில் உள்ள முக்கிய பரிந்துரைகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை2019 .ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவானது, சுமார் பேரிடம் இருந்து 60 2019 சாட்சியங்கள் மற்றும் ஆதாரங்களைத் திரட்டி அதன் அறிக்கையைஆம் ஆண்டு ஒக்டோபர் 23ஆம் திகதி சமர்ப்பித்தது. நடத்தப்படவுள்ள தாக்குதல் தொடர்பாக முன்னரே உளவுத்துறைத் தகவல்கள் கிடைத்துள்ளபோதும், அது செயற்படுத்தப்படவில்லை என்று அறிக்கை கூறியுள்ளது .பக்)1.( எனவே, SIS இன் பணிப்பாளர், MOD இன் செயலாளர், IGP, CNI மற்றும் DMI ஆகியோர் தமது பொறுப்புகளில் தவறிவிட்டனர், பிரதமர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் போன்றன தமது பொறுப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாக குழு தீர்மானத்திற்கு வந்தது.

*"அரச புலனாய்வு சேவையின் தோல்வியானது நூற்றுக்கணக்கான மரணங்கள், இன்னும் பல காயங்கள் மற்றும் இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் அளவிட முடியாத பேரழிவிற்கு வழிவகுத்தது, இதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. (பக்கம் 01)*

போலிச் செய்திகளைத் தடுப்பதற்கும், பாதுகாப்புச் சவால்களை எதிர்கொள்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகளுடன், கட்டமைப்பு மற்றும் சட்டச் சீர்திருத்தத்தின் அவசியத்தை இந்தக் குழு வலியுறுத்தியது. (பக்கம் 147-177). ஆனால், அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 5வருடங்கள் கடந்துள்ள போதும், பெரும்பாலான பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை .ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கை 2021ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி வெளியிடப்பட்டது. எனினும், இன்றுவரை, முதலாவது தொகுதியை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளது. அரசாங்கம் மற்றும்

உளவுத்துறை அமைப்புகளின் தோல்விக்கு வழிவகுத்த நாட்டின் அரசியல் சூழ்நிலையை இத்தொகுப்பு எடுத்துக்காட்டுகிறது. (பக்கம் 470)

இந்த துன்பகரமான சம்பவத்திற்கு, அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மற்றும் பிரதமர் உள்ளிட்ட அரசு பொறுப்புக்கூற வேண்டும். (பக்கம் 471)

".

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைத் தடுப்பதில் அரசும் அதன் அதிகாரிகளும் தோல்வி கண்டமையானது, நாட்டின் பொது நிர்வாகம் மற்றும் சட்ட அமுலாக்க வரலாற்றில் மிகப்பெரிய அளவில் கடமை தவறியுள்ளதை பிரதிபலிக்கின்றன." (பக்கம் 471)

பயங்கரவாதத்தை எதிர்க்கவும், மத போதனைகளை கண்காணிக்கவும், நல்லிணக்கம் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை அறிமுகப்படுத்தவும் இந்த அறிக்கை பல பரிந்துரைகளை செய்கிறது (பக்கம் 472). எனினும், பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கையைப் போன்றே, இந்த பரிந்துரைகளும் யோசனைகளும் செயற்படுத்தப்படவில்லை.

சந்தேகத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கவும், சம்பவத்தைத் தடுக்கவும் அதிகாரிகளுக்கு போதிய அவகாசமும் உளவுத்துறையும் இருந்ததாக அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலின் சாத்தியக்கூறுகள், சந்தேக நபர்களின் பெயர்கள் மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தலின் அவசரத்தை வலியுறுத்தி, அரச புலனாய்வு சேவை பணிப்பாளருக்கு 2019 ஏப்ரல் 4 மற்றும் 5 ஆம் திகதிகளிலும், மீண்டும் ஏப்ரல் 20ஆம் திகதியிலும் இந்தியாவில் இருந்து உளவுத்துறை அறிக்கைகள் கிடைத்துள்ள.[94] மேலும், குண்டுவெடிப்புக்கு ஐந்து நாட்களுக்கு முன்பு ஒரு ஒத்திகை நடத்தப்பட்டுள்ளது. அதாவது, சஹ்ரானின் வீட்டில் ரிமோட் கண்ட்ரோல் சாதனத்தைப் பயன்படுத்தி ஒரு மோட்டார் சைக்கிள் வெடிக்கச் செய்யப்பட்டது. மறுநாள் இந்தச் சம்பவம் குறித்து அரச புலனாய்வுப் பிரிவினருக்குத் தெரிந்த போதிலும், சஹ்ரான் பயங்கரவாதத் தாக்குதலுக்குத் திட்டமிடுவதாக உளவுத்துறை அறிக்கைகள் தெரிவித்த பின்னரும், அது தொடர்பான சரியான விசாரணைகள் நடைபெறவில்லை.[95] தாக்குதலுக்கு முன்னர் பெறப்பட்ட கணிசமான அளவு தகவல்கள், நடவடிக்கை,

விசாரணை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் பற்றாக்குறை ஆகியவற்றுடன் சேர்ந்து, தாக்குதல்களுக்கு உண்மையான பொறுப்பு யார் என்ற கேள்வியை எழுப்பியது.

“இலங்கை பொலிஸ் கோப்புகளில் உள்ள சஹ்ரான் பற்றிய தகவல்களுடன் உள்வரும் புலனாய்வு தகவல்களை இணைப்பதில் அரசாங்கம் சவால்களை எதிர்கொண்டிருக்கலாம். இருப்பினும், இந்த சவால்களை எதிர்கொள்ள அதிக முயற்சி எடுத்திருக்கலாம்.”[96]

இலங்கையில் உள்ள தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களை குறிவைத்து உடனடி தாக்குதல்கள் நடத்தப்படும் என அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளிலிருந்தும் பல புலனாய்வு அறிக்கைகள் எச்சரித்த போதிலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும் அறியாமையுடன் செயற்பட்டுள்ளனர்.[97] இந்த துரதிஷ்டமான சம்பவம் இம்பெற்ற சந்தர்ப்பத்தில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் இல்லை என்பதோடு, சம்பவம் நடைபெற்று முடிந்த சில மணி நேரத்தின் பின்னரே நாட்டை வந்தடைந்தார்.[98]

தற்கொலைத் தாக்குதல்கள் குறித்து எச்சரிக்கும் பல புலனாய்வு அறிக்கைகள் பற்றி தாம் அறிந்திருக்கவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க இருவரும் தெரிவித்தனர்.[99]

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிடம் இருந்து சமூக சமய நடுநிலையம் நான்கு மிக முக்கியமான ஆதாரங்களைப் பெற்ற பின்னர் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் “…வெடிகுண்டு தாக்குதல்கள் பற்றிய தகவல் கிடைக்கப்பெற்ற போதும், குறைந்த உறுப்பினர்களைக் கொண்ட JMIஇற்குள் ஒரு உள் நபர் இருந்தபோதிலும், அது தடுக்கப்படாதது ஆச்சரியமாக உள்ளது”[100] எனக் குறிப்பிட்டுள்ளது. வெடிகுண்டுத் தாக்குதல்கள் ஏன் தடுக்கப்படவில்லை, இதில் செல்வாக்கு செலுத்தியது யார், அதற்குப் பின்னால் இருந்தவர்கள் யார் என்பது பற்றிய தகவல்களைப் பகிரங்கமாக வெளியிடுமாறு குறித்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டது.[101] தாக்குதல்களைத் தடுக்கத் தவறியதற்காக சிலரை இழப்பீடு வழங்குமாறு, 12 அடிப்படை உரிமைகள் வழக்கின் தீர்ப்பின் மூலம் உத்தரவிடப்பட்டாலும், தாக்குதல்களைத் திட்டமிட்டது யார், நோக்கம் என்ன என்பது பற்றிய உண்மை வெளியிடப்படவில்லை.

*சனல் 4 வெளியிட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆவணப்படம்*

சனல் 4 அலைவரிசை அண்மையில் வெளியிட்ட ஆவணப்படம் நாட்டில் பல சர்ச்சைகளை ஏற்படுத்தியது. பல இலங்கையர்கள் ஏற்கனவே அறிந்ததை விட கணிசமாக புதிய எதையும் வெளிப்படுத்தவில்லை. இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் இஸ்லாமிய தீவிரவாதிகளுடன் தொடர்புபட்டிருக்கலாம் என்ற கண்ணோட்டத்தை பல இலங்கையர்கள் ஏற்கனவே அறிந்திருப்பதால் இந்தக் குற்றச்சாட்டுக்கள் புதியதாகக் கருதப்படவில்லை.

எவ்வாறாயினும், தற்போதைய அரச புலனாய்வு சேவையின் தலைவர் சுரேஷ் சாலி மீது புதிய குற்றச்சாட்டுகளை முன்வைத்து,[102] இந்த தொடர் நிகழ்வுகளை ராஜபக்ஷ குடும்பத்துடன், குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷவுடன் சனல் 4 ஆவணப்படம் தொடர்புபடுத்தியது. 2019இல் ராஜபக்ஷவை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவர சதி நடந்துள்ளதாக அந்த வீடியோ தெரிவிக்கின்றது.[103] 2019 குண்டுவெடிப்புக்கு சில நாட்களின் பின்னர், ஜனாதிபதி வேட்பாளராக தன்னை அறிவித்த கோட்டாபய ராஜபக்ஷ, தன்னை இஸ்லாமிய தீவிரவாதிகளை அழிக்கக்கூடிய பாதுகாப்பு வேட்பாளர் எனக் குறிப்பிட்டார்.

“2015 மற்றும் 2019இற்கு இடைப்பட்ட காலத்தில் தான் பதவியில் இல்லாதபோது சுரேஷ் சாலி மீது எந்தவிதமான செல்வாக்கும் செலுத்தவில்லை அல்லது உளவுத்துறை செயலாளருடன் தொடர்பு இருந்ததை மறுத்து கோட்டாபய ராஜபக்ஷ ஆவணப்படத்திற்கு பதிலளித்துள்ளார். உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுடன் தனக்கு எந்த தொடர்பும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.”[104]

சனல் 4 வீடியோ எந்தப் பதிலையும் வழங்கவில்லை. ஆனால், மேலும் சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்புகிறது. கர்தினால் ரஞ்சித் ஆண்டகை கூறியது போல், துயரத்தின் அனைத்து அம்சங்களிலும் சுயாதீனமான, வெளிப்படையான மற்றும் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விசாரணைக்கான நேரம் இதுவாகும். அரசாங்கம் தனது குடிமக்களுக்கு, குறிப்பாக தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப்பிழைத்தவர்களுக்கு ஒரு பொறுப்பைக் கொண்டுள்ளது, ஏனெனில் இது தார்மீக ரீதியாக எடுக்கவேண்டிய சரியான நடவடிக்கையாகும்.[105]

சனல் ஆவணப்படம் வெளியிடப்பட்ட பின்னர் 4, இரண்டு மேலதிக அறிக்கைகளை சமர்ப்பிக்க அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உத்தரவிடப்பட்டது. உச்ச நீதிமன்ற நீதிபதி எஸ்இமாம் தலைமையிலான அறிக்கை ஒன்றில்.ஐ., இலங்கையின் சில புலனாய்வு அமைப்புகளின் தலையீடு குறித்த ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ள கூற்றுகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது .நீதிபதி ஏ .ஜே.என்.டி அல்விஸ் தலைமையிலான இரண்டாவது அறிக்கை, அரச புலனாய்வு சேவை மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் முன்னர் கிடைத்த புலனாய்வுத் தகவல்களை மீளாய்வு செய்வதில் கவனம் செலுத்தியது. இந்த இரண்டு அறிக்கைகளும் சில விமர்சனங்களை எதிர்கொண்டதோடு, அண்மையில் இந்த அறிக்கை தொடர்பாக கவனஞ்செலுத்தப்பட்டது. டி அல்விஸ் தலைமையிலான அறிக்கையானது, ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோரை சுட்டிக்காட்டி, புலனாய்வு சேவையுடன் அவர்களுக்குள்ள தொடர்பை விளக்கியுள்ளது. இந்த இருவருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தற்போதைய அரசாங்கத்தில் நியமனங்களை வழங்கியுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள உதய கம்மன்பில, இவர்களது நியமனங்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவு வழங்கினாலும், ஒரு பொது கையெழுத்து மனுவை ஆரம்பிக்கவுள்ளதாக கூறினார். இந்த அறிக்கை தொடர்பாக, சில உண்மைகள் திரித்து தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதாகக் கூறி, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் திட்டமிட்டார். கிறிஸ்தவ தேவாலயத்தின் முகவரி மற்றும் கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபரின் அதிகார வரம்பு என்பன தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி கூறியுள்ளார்.

”யாரோ ஒருவரின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு இந்த அறிக்கை உருவாக்கப்பட்டது போல் தெரிகின்றது”

இந்த இரண்டு அறிக்கைகளையும் ஜனாதிபதி ஏன் இன்னும் வெளியிடவில்லை என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, கடந்த 2024 ஆம் திகதி 14 ஆம் ஆண்டு ஒக்டோபர் பகிரங்கமாக கேள்வி எழுப்பியிருந்தார். தேசிய பொறுப்புக்கூறலை விட கட்சி நலன்களை முன்னிறுத்தினார் என ஜனாதிபதியை கம்மன்பில கடுமையாக விமர்சித்தார், அறிக்கையை வெளியிடாமல் நிறுத்தி வைப்பது வெளிப்படைத் தன்மைக்கு எதிரானது என்றும் பொதுமக்களின் தகவல் அறியும் உரிமையை மீறுவதாகவும் அவர்

வாதிட்டார். இதற்கு பதிலளித்த ஜனாதிபதி திஸாநாயக்க, பொலிசார் புதிய விசாரணைகளை முன்னெடுப்பதால் அறிக்கைகள் வெளியிடப்பட மாட்டாது என தெரிவித்தார் .அறிக்கைகள் முழுமையாகவும் துல்லியமாகவும் இருப்பதை உறுதி செய்ய கவனமாக ஆராய வேண்டும் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார் .உரிய சட்ட வழிகள் மூலம் தாக்குதல்களுக்குப் பொறுப்பான அனைவரையும் பொறுப்பேற்கச் செய்வதாகவும், நீதியைப் பெற்றுக்கொடுப்பதாகவும் அவர் பொதுமக்களுக்கு உறுதியளித்தார். இது இவ்வாறிருக்க, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலை தமது அரசியல் ஆதாயத்திற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கம்மன்பில பயன்படுத்தியதாக, வண பிதா. .சிறில் காமினி பெர்னாண்டோ விமர்சித்துள்ளார்தற்போது நடைபெற்று வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசாரணைக்கு இடையூறு ஏற்படுத்துவதையோ அல்லது குறுக்கிடுவதையோ தவிர்க்குமாறும் கம்மன்பிலவிடம் அவர் வலியுறுத்தியுள்ளார். அறிக்கை விடயத்தில் காணப்படும் விருப்பமுரணை வணபிதா காமினி. குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, கொலை விசாரணையில் சாட்சியங்களை மறைத்து அழித்ததாக குற்றம் சாட்டப்பட்ட பிரசன்ன டி அல்விஸின் சகோதரியே ஏ .ஜே.என்.டி அல்விஸ் எனக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான தொடர்பு இருப்பதால், அறிக்கையானது பக்கச்சார்பாக இருக்கும் என்றும், சுயாதீனமாக அமையாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சமூக சமய நடுநிலையத்தில் பணிப்பாளரான அருட்தந்தை ரொஹான் சில்வா, ஊடகவியலாளர் தரிந்து ஜயவர்தனவுடன் இணைந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதற்கான குறுகிய கால மற்றும் நீண்டகால நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டும் முன்மொழிவை சமர்ப்பித்தார் 3 இணைப்பு)). சனல் ஆவணப்படத்தி 4ல் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய சாட்சியான ஆசாத் மௌலானா உள்ளடங்கலான ஏனைய சாட்சிகள் மற்றும் தகவலறிந்தவர்களுடன் மீண்டும் சாட்சியங்கள் அல்லது தகவல்களை முன்வைக்க வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று பிரேரணையில் வலியுறுத்தப்பட்டுள்ளது .ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ள கூற்றுகளின் துல்லியம் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அது கோரியுள்ளது .முறைப்பாட்டின் பின்னர், பிள்ளையான் எனப்படும் சிவநேசத்துறை சந்திரகாந்தன் மற்றும் முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் சுரேஷ் சாலி ஆகியோருக்கு இடையிலான தொடர்புகள் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆராயத் தொடங்கியது.

தாக்குதல்களுடன் திரு சுரேஷ் .சாலி தொடர்புடையதை தெளிவுபடுத்தும்வரை, அரச புலனாய்வு சேவையின் பணிப்பாளர் பதவியில் இருந்து அவரை உடனடியாக நீக்க வேண்டும் என்றும் பரிந்துரைகளில் கோரப்பட்டது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஆரம்ப விசாரணைகளை நடத்திய குழுக்களை மீண்டும் நியமிக்கவும் பரிந்துரைத்தது. இதனால் அவர்கள் தமது பணியை மீண்டும் ஆரம்பிக்க முடியும். சமூக சமய நிலையத்தின் அழுத்தத்தின் காரணமாக, திரு சுரேஷ் .சாலி மாற்றப்பட்டதோடு, ஷானி அபேசேகர உள்ளிட்ட ஏனையோர், ஒப்பந்த அடிப்படையில் அவர்களது பதவிகளில் மீண்டும் சேர்க்கப்பட்டனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படும் என இலங்கை பொலிஸ்துறை அறிவித்துள்ளது .இம்முயற்சி சரியான முறையில் நிறைவேற்றப்பட்டால், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான நீதியைப் பெற்றுத்தர முடியும்.

## எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## இழப்பீடு

பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய இழப்பீடு கிடைப்பதை உறுதி செய்யுமாறும், அவர்கள் தமது பிரதிநிதிகளுடன் சேர்ந்து நிதியை விநியோகிப்பதில் முழுமையாக கலந்தாலோசிக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டுமென ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளது.[106]

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவதில் அரசாங்கமும் அரசு சாரா அமைப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

எவ்வாறாயினும், நிதி வழங்குவதில் அடையாளம் காணப்பட்ட ஒரு முக்கிய பிரச்சினை என்னவென்றால், பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் விபரங்கள் உறுதிப்படுத்தப்படாவிட்டால், சில பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் ஒதுக்கப்பட்ட நிதியைப் பெறுவதில் இருந்து விலக்கப்படலாம். இது பாரிய பிரச்சினையாக காணப்படுவதோடு, அநீதியாகவும் காணப்படும். தவறு செய்யாமல் தண்டிக்கப்படும் நிலைக்கு, பாதிக்கப்பட்டவர்கள் சிலர் தள்ளப்படலாம். எனவே, இறந்தவர்களின் எண்ணிக்கையை கவனமாகவும் முழுமையாகவும் ஆராய்ந்து

யாரும் புறக்கணிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம்.

தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக, செத் சரண் (கொழும்பு மறைமாவட்டத்தின் சமூகப்பணிப் பிரிவு) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து ரூ. 350.7 மில்லியன் பெறப்பட்டதாக 2019 ஆம் ஆண்டின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.[107] மொத்த ஒதுக்கீடுகளில், மிகப்பெரிய பகுதி பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்விக்கு உதவுவதற்கும், பிறந்த குழந்தைகளுக்கு ஐந்து வயது வரை மாதாந்த உதவித்தொகை வழங்கவும் ஒதுக்கப்பட்டுள்ளது.[108] 2019 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான விபரங்களை கீழ்காணும் அட்டணையில் காணலாம்.[109]

| பிரிவு | ஒதுக்கீடு (ரூபாய் - மில்லியன்) |
|---|---|
| பிள்ளைகளின் கல்வி | 102 |
| நட்டஈடு | 16.8 |
| மருத்துவச் செலவு | 17.8 |
| பாதிக்கப்பட்டவர்களுக்கான நாளாந்த செலவு | 35 |
| அரசாங்கத்தின் உதவியுடன் வீடுகளை அமைப்பதற்காக காணிகளை கொள்வனவு செய்தல் | 53 |
| மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தை மீள புனரமைத்தல் | 10 |
| குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் | 30 |
| இயலாமையை கொண்டவர்களுக்கான சிகிச்சை | 32 |

சோகத்தால் மனரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக, கர்தினாலின் மேற்பார்வையில், டயலொக் அறக்கட்டளையின் “Rally to Care” முயற்சியின் ஆதரவுடன் ஒரு ஆலோசனை மையம் நிறுவப்பட்டுள்ளது.[110] நிரந்தர வதிவிடங்கள் இல்லாத குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணிகளை கொள்வனவு செய்யும் நோக்கில்

சுமார் 53 மில்லியன் ரூபாய் ஒதுக்கீட்டில் அரசாங்கத்துடன் இணைந்து இந்த திட்டம் முன்னெடுக்கப்படும்.[111]

2023 ஜனவரி மாதம் 12ஆம் திகதி 12 அடிப்படை உரிமைகள் மனுக்கள் தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பிரகாரம், 'உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019 ஏப்ரல் - பாதிப்பட்டோருக்கான நிதியம்' என்ற தலைப்பில், இலங்கை வங்கியின் இராஜகிரிய கிளையின், 0090167960 என்ற கணக்கு இலக்கத்தில், 2023 ஜனவரி 19ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பாதிக்கப்பட்டோருக்கான நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டோருக்கான நிதியத்திற்கு நன்கொடைகளைக் கோரும் அறிவிப்பு 2023 ஜனவரி 29ஆம் திகதியன்று சிலுமின, வீரகேசரி, சண்டே ஒப்சவர், லங்காதீப, தினகரன் மற்றும் தி சண்டே டைம்ஸ் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. இழப்பீடு வழங்கப்படாமை அல்லது குறைவான இழப்பீடு பெறப்பட்ட வழக்குகள் தொடர்பான விசாரணைகள் முடிக்கப்பட்டு, அதன் முடிவுகள் 2023 மார்ச் 14ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டன. பாதிக்கப்பட்ட நிதியிலிருந்து பணம் செலுத்துவதற்கான திட்டம் ஜனவரி 2023இல் உருவாக்கப்பட்டது. தாக்குதலால் பாதிக்கப்பட்ட நபர்களின் தேவை அடிப்படையிலான மதிப்பீட்டின் அடிப்படையில் நிதியத்திலிருந்து பணம் செலுத்தப்படும். [112]

| Category of victim | Amount Paid Rs. | Date Paid |
|---|---|---|
| Persons who are totally permanently disabled | Rs. 2,500,000/=<br>*(Rs.500,000 each)* | 17.08.2023 |
| Families that suffered economic loss due to the death of a wage earning family member* | Rs. 29,225,000/=<br>*(Rs.175,000 each)* | 04.10.2023 |
| Persons who are partially permanently disabled<br>(Over 70% as per certification of the Medical Officer). | Rs. 2,400,000/=<br>*(Rs.100,000 each)* | 31.10.2023 |
| **Total** | **Rs. 34,125,000/=** | **As at Oct 31, 2023** |

*மூலம்* https://reparations.gov.lk

இழப்பீட்டு அலுவலகம், குடும்பத்தின் பொருளாதாரத்திற்கு உதவிய குடும்ப உறுப்பினரின் மரணம் காரணமாக, நிதி நெருக்கடியை அனுபவித்த குடும்பங்களுக்கு உதவி வழங்குவதற்காக, தம்மிடமுள்ள வரையறுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தத் தீர்மானித்தது.[113] 18 வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பாதிக்கப்பட்டவருக்கும் அவர்களின் மரணம் காரணமாக நிதி இழப்பு ஏற்பட்டதாக இழப்பீட்டு அலுவலகம் கருதுகிறது. இருப்பினும், இளைய குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களின் துன்பத்தை இது குறைமதிப்பிற்கு உட்படுத்தவில்லை. ஆனால் நிதி இழப்புக்கான நிவாரணம் வழங்குவதில் மட்டுமே கவனம் செலுத்துகிறது.[114]

செலுத்தப்பட்ட கட்டணங்கள் தொடர்பான விபரம், பின்னிணைப்பு 02இல் காணப்படுகின்றது.

உயிர் பிழைத்தவர்களினதும் பாதிக்கப்பட்ட குடும்பங்களினதும் வாழ்க்கைச் செலவுகளை ஈடுசெய்வதற்கு, பல அரசு சாரா நிறுவனங்களும் தனிப்பட்ட நன்கொடையாளர்களும் பெரும் பங்களித்துள்ளனர். ராஜித திஸாநாயக்க இயக்கிய 'ஜூலை 2019இல் ஒரு நாள்' என்ற மேடை நாடகத்தை 2023 மார்ச் 18ஆம் திகதி டவர் மண்டபத்தில் மேடையேற்றி, அதன்மூலம் சமூக சமய நடுநிலையம் நிதி திரட்டலை ஏற்பாடு செய்தது. தாக்குதல்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை இந்த நாடகம் பிரதிபலித்தது. மேலும், அனைத்து வருவாயும் பாதிக்கப்பட்ட அவசர தேவையில் உள்ளவர்களுக்கு உதவ கவனமாக பயன்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, காதுகளில் ஒலிக்கும் சத்தம் கேட்டுக்கொண்டே இருப்பதைப் போன்ற பாதிப்பிற்கு உள்ளாகியிருந்த ஒருவரை குணப்படுத்த அறுவைச் சிகிச்சை தேவைப்பட்டது. அதிஷ்டவசமாக, இந்த அறுவை சிகிச்சையை இலவசமாக செய்ய முடிந்தது. எனினும், வைத்தியர்களை சந்தித்தல், போக்குவரத்து மற்றும் அறுவை சிகிச்சை தொடர்பான ஏனைய செலவுகளை சமூக சமய நடுநிலையம் மேற்கொண்டது. அறுவைசிகிச்சைக்குப் பின்னர் பூரண ஓய்வு தேவைப்பட்டதால், அவருக்கு வேலை செய்து வருமானம் ஈட்ட முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில், மூன்று மாதங்களுக்கு அவசியமான வாழ்க்கைச் செலவினை மாதாந்தம் சுமார் 50,000 ரூபாய் என்ற அடிப்படையில் சமூக சமய நடுநிலையம் அதனை ஏற்றுக்கொண்டது. தற்போதும் அவர் கேட்கும் திறனில் பிரச்சினையை எதிர்கொள்வதால், அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்ய வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர். மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் இருந்து

உயிர்த்தப்பிய, தேயிலை பெருந்தோட்ட சமூகத்தைச் சேர்ந்த ஏனைய மூன்று பேரின் வாழ்வாதாரத்திற்கு சமூக சமய நடுநிலையம் உதவுவதோடு, அவர்களின் தனிப்பட்ட தேவைகளை பூர்த்திசெய்ய உதவியது.

## நீதிக்கான தேசிய மற்றும் சர்வதேச இயக்கம்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி, கடந்த ஐந்து வருடங்களாக கத்தோலிக்க திருச்சபை போராடி வருகின்றது. ஊடக சந்திப்புகள், ஆர்ப்பாட்டங்கள், மாநாடுகள் மற்றும் ஊடக விழிப்புணர்வு உள்ளிட்ட பல்வேறு முறைகளை அவர்கள் நீதிக்காக கையாள்கின்றனர். விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதும், தாக்குதலுக்கு காரணகர்த்தாவாக செயற்பட்டவரை அடையாளம் காண்பதும் முதன்மையான கோரிக்கையாக உள்ளது.[115] முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு 2021ஆம் ஆண்டு அனுப்பிய கடிதத்தில், இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை பல கேள்விகளை முன்வைத்து ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்குமாறு கோரியது.[116]

'பின்வரும் முக்கிய கேள்விகளுக்கு தீர்வு காணும் ஒரு முழுமையான விசாரணையின் மூலம் மட்டுமே இது முடிவுக்கு வர வேண்டுமென நாம் நம்புகிறோம்:

*இந்த தாக்குதலின் பின்னணியில் சதி இடம்பெற்றுள்ளதா?*
*இந்த தாக்குதல்களின் நோக்கம் என்ன?*
*இந்த தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் யார்?*
*இந்த விசாரணைகளின் பெறுபேறுகளை மக்களுக்கு பின்னர் பகிரங்கப்படுத்த வேண்டும்.*[117]

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

'எனவே, இந்த ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல்களுடன் நேரடியாக தொடர்புட்ட அனைவருக்கும் மற்றும் அவர்களின் கட்டளைப்படி அவர்களுக்கு உதவிய அனைவருக்கும், இந்தத் தாக்குதல்களைத் திட்டமிட்டவர்கள் மற்றும் இந்தத் தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் அனைவருக்கும், இந்த படுகொலைகளைத் தடுக்க முடிந்த போதிலும், அதைச் செய்யாமல்

புறக்கணித்த அரசியல் தலைவர்கள், அரச அதிகாரிகள், பொலிஸார் மற்றும் புலனாய்வுத் துறை அதிகாரிகள் அனைவருக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட வேண்டும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.[118]

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரும் இயக்கத்தின் முதன்மைக் கூறுகளாக, கத்தோலிக்க திருச்சபையின் செயற்பாடுகள், கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் நீதிக்கான தொடர்ச்சியான செயற்பாடுகளும் சட்ட முயற்சிகளும் காணப்படுகின்றன. மேற்கூறிய நீதிக்கான செயற்பாடுகளில், நீர்கொழும்பு பிரஜைகள் குழு, ஏப்ரல் 21 நீதிக்கான அறக்கட்டளை, சமூக சமய நடுநிலையம் மற்றும் செத் சரண உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களும் தொடர்ந்து தீவிரமாக பங்களிக்கின்றன.

சர்வதேச செயற்பாடுகளை நோக்கும்போது, 2019இல் இலங்கையில் உள்ள தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்கள் மீது நடத்தப்பட்ட ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரிய தாக்குதல்களில் ஈடுபட்டதன் காரணமாக, பயங்கரவாதத்தை ஆதரித்த மூன்று இலங்கையர்கள் மீது அமெரிக்க நீதித்துறை குற்றஞ்சாட்டியுள்ளது. இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிற்கு ஆட்சேர்ப்பு செய்த மற்றும் பயிற்சியளித்த "இரண்டாம் அமீர்" என்று அழைக்கப்படும் மொஹமட் நௌபர், தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்ட வெடிகுண்டுகளை தயாரிக்க உதவியதாக குற்றம் சாட்டப்பட்ட மொஹமட் அன்வர் மொஹமட் ரிஸ்கான் மற்றும் தாக்குதலின் போது பொலிஸ் அதிகாரி ஒருவரை கொன்றதாக கூறப்பட்ட அஹமட் மில்ஹான் ஹயாது மொஹமட் ஆகிய மூவருமே குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆவர்.[119] இவர்கள் மூவரும் தற்போது இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விடுவிக்கப்படும் பட்சத்தில் அமெரிக்க குற்றச்சாட்டை வைத்துக்கொண்டு, இலங்கையில் அவர்கள் மீதான வழக்கு விசாரணைக்கு உதவ அமெரிக்க நீதித்துறை தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளது. இந்த தாக்குதல்களின் ஐந்து அமெரிக்க பிரஜைகளும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. [120]

'உலகெங்கிலும் உள்ள அமெரிக்கர்களை குறிவைக்கும் பயங்கரவாதிகளை பொறுப்புக்கூற வைப்பதை உறுதிசெய்ய அமெரிக்கா வலுவான நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த விடயம் தெளிவாகக் காட்டுகிறது" என்று லொஸ்

ஏஞ்சல்ஸில் உள்ள அமெரிக்க பெடரல் வழக்கறிஞர் நிக் ஹன்னா கூறியுள்ளார்.'[121]

## பரிந்துரைகள்

நாட்டிலுள்ள முதன்மையான தேவாலயங்களையும் ஹோட்டல்களையும் குறிவைத்து நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு படுகொலையானது, யுத்தத்திற்கு பின்னர் நாட்டில் நடத்தப்பட்ட மிகப் பயங்கரமான தாக்குதலாக இனங்காணலாம். தாக்குதல்களால் ஏற்பட்ட பேரழிவுகள், அதன் தாக்கத்தின் அளவை பிரதிபலிக்கும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. தாக்குதல்கள் நடத்தப்பட்டு 5 வருடங்கள் கடந்துள்ள போதும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் முழுமையான நீதி கிடைக்கவில்லை. இந்நிலையில், தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கான சில பரிந்துரைகள் கீழே தரப்பட்டுள்ளன.

- உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான அனைத்து நீதிமன்ற வழக்குகளையும் துரிதப்படுத்தல்.
- முதன்மையாக பொறுப்பாளர்களுக்கு எதிராக, குறிப்பாக காரணகர்த்தவாக செயற்பட்டவர்களுக்கு எதிராக சர்வதேச விசாரணைகள் மற்றும் வழக்குகளை நடத்துதல்.
- தாக்குதலின் பின்னணியில் செயற்பட்ட காரணகர்த்தா மற்றும் நோக்கங்களை கண்டறிவதற்கு, நம்பகமான சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்தல்.
- உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் பாதிக்கப்பட்ட அனைவருக்குமான போதுமான இழப்பீடு, உடனடியாகவும், நியாயமாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் சென்றடைவதை உறுதிசெய்தல்.
- உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான சகல அறிக்கைகளையும் பொதுவில் கிடைக்கச் செய்தல்.
- ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்தல்.

- உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் ஏற்பட்ட இறப்புகளின் துல்லியமான எண்ணிக்கையை பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவது முக்கியம்.
- சனல் ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ள கூற்றுக்கள் குறித்து 4 முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்

# பிண்ணிணைப்புகள்

[1] "Sri Lanka Attacks: What We Know about the Easter Bombings." *BBC News*, BBC, 28 Apr. 2019, www.bbc.com/news/world-asia-48010697.

[2] Centre for Society and Religion. "Death Toll in Sri Lanka Easter Sunday Attacks-contradictions in numbers'". *Centre for Society and Religion*, 19 Feb 2025. https://easterattack.info/csr-reports-2025/

[3] "Sri Lanka Attacks: What We Know about the Easter Bombings." *BBC News*, BBC, 28 Apr. 2019, www.bbc.com/news/world-asia-48010697.

[4] VOA News. "Sri Lankan Police Enter HQ of Group Blamed for Easter Attacks." *Voice of America*, 28 Apr. 2019, www.voanews.com/a/sri-lankan-police-enter-hq-of-group-blamed-for-easter-attacks/4894829.html.

[5] "After Sri Lanka's Easter Bombings: Reducing Risks of Future Violence." *Crisis Group*, 17 Feb. 2021, www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/302-after-sri-lankas-easter-bombings-reducing-risks-future-violence.

[6] Sri Lanka Brief. "Easter Sunday Attacks in Sri Lanka: Accountability, Justice, and the Deep State." Sri Lanka Briefing Notes, no. 24, Feb. 2022, pp. 3–24, https://srilankabrief.org/briefing-note-easter-sunday-attacks-in-sri-lanka-accountability-justice-and-the-deep-state/.

[7] "CSR officially receives four most important evidence given at the Presidential Commission of Inquiry on the Easter Attacks': Further established that the security forces had prior information of the bombers." Centre for Society and Religion, 19 Jan. 2024.

[8] "SC FR 163/2019." Supreme Court, https://www.supremecourt.lk/images/documents/sc_fr_163_2019.pdf. Accessed 28 Mar. 2024.

[9] Sri Lanka Brief. "Easter Sunday Attacks in Sri Lanka: Accountability, Justice, and the Deep State." Sri Lanka Briefing Notes, no. 24, Feb. 2022, pp. 3–24, https://srilankabrief.org/briefing-note-easter-sunday-attacks-in-sri-lanka-accountability-justice-and-the-deep-state/.

[10] "Channel 4- Why Now? Why Not?", *The Island*, 10 Sept 2023, https://island.lk/channel-4-why-now-why-not/

[11] Radhakrishnan, R K. "Constitutional Coup." Frontline, 10 Nov. 2018, https://frontline.thehindu.com/world-affairs/article25436345.ece

[12] 'Actions taken by or on orders made by the Supreme Court', *Office for Reparations Sri Lanka*. https://reparations.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=153:action-taken-by-or-on-orders-made-by-the-supreme-court&catid=8:news-and-events&lang=en&Itemid=282

[13] Centre for Society and Religion. "The Highlights of 11 Main Easter Attacks Court Cases (1st January 2021- 21st June 2023)," *Centre for Society and Religion*, 21st June 2023. https://easterattack.info/csr-reports/.

[14] Sri Lanka Brief. "Easter Sunday Attacks in Sri Lanka: Accountability, Justice, and the Deep State." Sri Lanka Briefing Notes, no. 24, Feb. 2022, pp. 3–24, https://srilankabrief.org/briefing-note-easter-sunday-attacks-in-sri-lanka-accountability-justice-and-the-deep-state/.

[15] Pokharel, Sugam, et al. "Bombs Tear through Sri Lankan Churches and Hotels, Killing 250 People." CNN, Cable News Network, 25 Apr. 2019, https://edition.cnn.com/2019/04/21/asia/sri-lanka-explosions/index.html

[16] Pokharel, Sugam, et al. "Sri Lanka Attacks: What We Know about the Easter Bombings." BBC News, BBC, 28 Apr. 2019, www.bbc.com/news/world-asia-48010697

[17] Pokharel, Sugam, et al. "Sri Lanka Attacks: What We Know about the Easter Bombings." BBC News, BBC, 28 Apr. 2019, www.bbc.com/news/world-asia-48010697

[18]Sri Lanka Brief. "Easter Sunday Attacks in Sri Lanka: Accountability, Justice, and the Deep State." Sri Lanka Briefing Notes, no. 24, Feb. 2022, pp. 3–24, https://srilankabrief.org/briefing-note-easter-sunday-attacks-in-sri-lanka-accountability-justice-and-the-deep-state/.

[19]Written statement* submitted by Franciscans International, a non-governmental organization in general consultative status." United Nations, 5 Feb. 2024.

[20] "Sri Lanka Attacks: Who Are the Victims?" BBC News, BBC, 26 Apr. 2019, www.bbc.com/news/world-asia-48002169.

[21] "Sri Lanka Population (Live)." Worldometer, 16 July 2023, www.worldometers.info/world-population/sri-lanka-population/#:~:text=Sri%20Lanka%202023%20population%20is,(and%20dependencies)%20by%20population. Accessed 16th December 2023.

[22] Kuruwita, Rathindra. "Sri Lankans Are Positive about Religious Diversity, Says Pew Survey." The Diplomat, 18 Sept. 2023, https://thediplomat.com/2023/09/sri-lankans-are-positive-about-religious-diversity-says-pew-survey/

[23] "Fifteen Dead in Sri Lanka after Shootout with Suspected Islamist Militants." NBCNews.Com, NBCUniversal News Group, 27 Apr. 2019, www.nbcnews.com/news/world/fifteen-dead-sri-lanka-after-shootout-suspected-islamist-militants-n999131.

[24] "Fifteen Dead as Sri Lanka Forces Raid Suspects' Hideout." Al Jazeera, Al Jazeera, 27 Apr. 2019, www.aljazeera.com/news/2019/4/27/sri-lanka-15-dead-in-gun-battle-with-bombing-suspects#:~:text=Military%20spokesman%20Sumith%20Atapattu%20said,he%20said%20in%20a%20statement.

[25] Gunaratna, Rohan. Sri Lanka's Easter Sunday Massacre: Lessons for the International Community. Penguin Books, an Imprint of Penguin Random House SEA, 2023.

[26] Welikala, Asanga. "Paradise Lost? Preliminary Notes on a Constitutional Coup." Centre for Policy Alternatives, 29 Oct. 2018, www.cpalanka.org/paradise-lost-preliminary-notes-on-a-constitutional-coup/.

[27] "Sri Lanka's Parliament Passes No-Confidence Vote against Newly Appointed PM Rajapaksa." France 24, FRANCE 24, 14 Nov. 2018, www.france24.com/en/20181114-sri-lanka-parliament-no-confidence-vote-pm-rajapaksa

[28] Welikala, Asanga. "Paradise Lost? Preliminary Notes on a Constitutional Coup." Centre for Policy Alternatives, 29 Oct. 2018, www.cpalanka.org/paradise-lost-preliminary-notes-on-a-constitutional-coup/.

[29] Radhakrishnan, R K. "Constitutional Coup." Frontline, 10 Nov. 2018, https://frontline.thehindu.com/world-affairs/article25436345.ece

[30] Miglani, Sanjeev, and Shihar Aneez. "Exclusive: Sri Lankan Ex-Defence Chief Gotabaya Says He Will Run for President, Tackle Radical Islam." Reuters, 27 Apr. 2019, www.reuters.com/article/idUSKCN1S3049/

[31] Miglani, Sanjeev, and Shihar Aneez. "Exclusive: Sri Lankan Ex-Defence Chief Gotabaya Says He Will Run for President, Tackle Radical Islam." Reuters, 27 Apr. 2019, www.reuters.com/article/idUSKCN1S3049/

[32] "Gotabaya Rajapaksa Sworn in as Sri Lanka's New President." Al Jazeera, Al Jazeera, 18 Nov. 2019, www.aljazeera.com/news/2019/11/18/gotabaya-rajapaksa-sworn-in-as-sri-lankas-new-president.

[33] "Remembering the Children of Batticaloa's Zion Church." Tamil Guardian, 21 Apr. 2020, www.tamilguardian.com/content/remembering-children-batticaloas-zion-church.

[34] Asos Billionaire Loses Three Children in Sri Lanka Attacks." BBC News, BBC, 22 Apr. 2019, www.bbc.com/news/business-48011075.

[35] Sri Lanka Attacks: Who Are the Victims?" BBC News, BBC, 26 Apr. 2019, www.bbc.com/news/world-asia-48002169.

[36] Koralage, Ama. "Tracing Roots and Winning Rights: The March of the Malaiyaha Tamil Community." Groundviews, 18 Aug. 2023, https://groundviews.org/2023/08/11/tracing-roots-and-winning-rights-the-march-of-the-malaiyaha-tamil-community/.

[37] Ravindran, Jeevan. "Malaiyaha Tamils' Long March to Equality in Sri Lanka." Himal Southasian, 15 Dec. 2023, www.himalmag.com/politics/malaiyaha-tamils-equality-sri-lankan-tea-estates#:~:text=In%20April%2C%20the%20World%20Bank,class%2C%20labour%20segmentation%20and%20ethnicity.

[38] Koralage, Ama. “Tracing Roots and Winning Rights: The March of the Malaiyaha Tamil Community.” Groundviews, 18 Aug. 2023, https://groundviews.org/2023/08/11/tracing-roots-and-winning-rights-the-march-of-the-malaiyaha-tamil-community/.

[39] Koralage, Ama. “Tracing Roots and Winning Rights: The March of the Malaiyaha Tamil Community.” Groundviews, 18 Aug. 2023, https://groundviews.org/2023/08/11/tracing-roots-and-winning-rights-the-march-of-the-malaiyaha-tamil-community/.

[40] Koralage, Ama. “Tracing Roots and Winning Rights: The March of the Malaiyaha Tamil Community.” Groundviews, 18 Aug. 2023, https://groundviews.org/2023/08/11/tracing-roots-and-winning-rights-the-march-of-the-malaiyaha-tamil-community/.

[41] Suryanarayan , V. “The Plight of Tamils of Indian Origin in Sri Lanka.” The New Indian Express, 22 Dec. 2021, www.newindianexpress.com/opinions/2021/Dec/22/the-plight-of-tamils-of-indian-origin-in-sri-lanka-2398239.html.

[42]*நபர்களின் தனியுரிமையை பாதுகாப்பதற்காக, அனைத்து பெயர்களும் மாற்றப்பட்டுள்ளன. சமூக சமய நடுநிலையத்தின் தனிப்பட்ட தொடர்புகள் ஊடாகவே தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

[43] Pokharel, Sugam, et al. “Bombs Tear through Sri Lankan Churches and Hotels, Killing 250 People.” CNN, Cable News Network, 25 Apr. 2019, https://edition.cnn.com/2019/04/21/asia/sri-lanka-explosions/index.html

[44] Gunaratna, Rohan. Sri Lanka’s Easter Sunday Massacre: Lessons for the International Community. Penguin Books, an Imprint of Penguin Random House SEA, 2023.

[45] “After Sri Lanka’s Easter Bombings: Reducing Risks of Future Violence.” Crisis Group, 17 Feb. 2021, www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/302-after-sri-lankas-easter-bombings-reducing-risks-future-violence.

[46]“After Sri Lanka’s Easter Bombings: Reducing Risks of Future Violence.” Crisis Group, 17 Feb. 2021, www.crisisgroup.org/asia/south-asia/sri-lanka/302-after-sri-lankas-easter-bombings-reducing-risks-future-violence. .

[47] “Sri Lanka Vows ‘maximum Force’ against Anti-Muslim Rioters.” BBC News, BBC, 14 May 2019, www.bbc.com/news/world-asia-48257299.

[48] Ethirajan, Anbarasan. “Sri Lanka’s Muslims ‘demonised’ after Easter Bombings.” BBC News, BBC, 13 Aug. 2019, www.bbc.com/news/world-asia-49249146.

[49] Gunasingham, Amresh. “Sri Lanka Attacks: An Analysis of the Aftermath.” Counter Terrorist Trends and Analyses, vol. 11, no. 6, 2019, pp. 8–13. JSTOR, https://www.jstor.org/stable/26662255.

[50] “Sri Lanka Vows ‘maximum Force’ against Anti-Muslim Rioters.” BBC News, BBC, 14 May 2019, www.bbc.com/news/world-asia-48257299.

[51] “Doctor Arrested for ‘Sterilising’ Women in Sri Lanka Was Framed: Probe.” NDTV.Com, 5 July 2019, www.ndtv.com/world-news/doctor-arrested-for-sterilising-women-in-sri-lanka-was-framed-probe-2064837.

[52] “Sri Lanka Bombings: All the Latest Updates.” Al Jazeera, Al Jazeera, 2 May 2019, www.aljazeera.com/news/2019/5/2/sri-lanka-bombings-all-the-latest-updates#:~:text=Sri%20Lanka%20bans%20face%20coverings,statement%20from%20presidential%20office%20said

[53] Ethirajan, Anbarasan. “Sri Lanka’s Muslims ‘demonised’ after Easter Bombings.” BBC News, BBC, 13 Aug. 2019, www.bbc.com/news/world-asia-49249146.

[54] Economy and Investments.” Qatar Embassy in Colombo - Democratic Socialist Republic of Sri Lanka, https://colombo.embassy.qa/en/sri-lanka/economy-and-investments. Accessed 28 Mar. 2024.

[55] “Economy and Investments.” Qatar Embassy in Colombo - Democratic Socialist Republic of Sri Lanka, https://colombo.embassy.qa/en/sri-lanka/economy-and-investments. Accessed 28 Mar. 2024.

[56] Wilson, Antonia. “Sri Lanka Ranked Top Country for Travel in 2019 by Lonely Planet.” The Guardian, Guardian News and Media, 23 Oct. 2018, www.theguardian.com/travel/2018/oct/23/sri-lanka-ranked-top-country-for-travel-in-2019-by-lonely-planet.

[57] Wilson, Antonia. "Sri Lanka Ranked Top Country for Travel in 2019 by Lonely Planet." The Guardian, Guardian News and Media, 23 Oct. 2018, www.theguardian.com/travel/2018/oct/23/sri-lanka-ranked-top-country-for-travel-in-2019-by-lonely-planet.

[58] "The Impact of the Easter Sunday Attacks." Central Bank of Sri Lanka- Annual Report 2019, 2019, pp. 186–187.

[59] "Sri Lanka Travel Advisory." U.S. Embassy in Sri Lanka, 21 Apr. 2019, https://lk.usembassy.gov/sri-lanka-travel-advisory/

[60] "UK Warns against All but Essential Sri Lanka Travel." BBC News, BBC, 25 Apr. 2019, www.bbc.com/news/uk-48057838.

[61] "The Impact of the Easter Sunday Attacks." Central Bank of Sri Lanka- Annual Report 2019, 2019, pp. 186–187.

[62] "SL Tourism Statistics." High Commission of the Democratic Socialist Republic of Sri Lanka in the United Kingdom, https://srilankahc.uk/sl-tourism-statistics/. Accessed 28 Mar. 2024.

[63] "The Impact of the Easter Sunday Attacks." Central Bank of Sri Lanka- Annual Report 2019, 2019, pp. 186–187.

[64] "Long-Term Impact of Easter Sunday Attacks on SMEs." Market Development Facility, https://marketdevelopmentfacility.org/wp-content/uploads/2020/01/MDF-Brief-Long-term-Impact-of-Easter-Sunday-Attacks-on-SMEs.pdf. Accessed 28 Mar. 2024.

[65] "Long-Term Impact of Easter Sunday Attacks on SMEs." Market Development Facility, https://marketdevelopmentfacility.org/wp-content/uploads/2020/01/MDF-Brief-Long-term-Impact-of-Easter-Sunday-Attacks-on-SMEs.pdf. Accessed 28 Mar. 2024.

[66] The Impact of the Easter Sunday Attacks." Central Bank of Sri Lanka- Annual Report 2019, 2019, pp. 186–187.

[67] The Impact of the Easter Sunday Attacks." Central Bank of Sri Lanka- Annual Report 2019, 2019, pp. 186–187.

[68] The Impact of the Easter Sunday Attacks." Central Bank of Sri Lanka- Annual Report 2019, 2019, pp. 186–187.

[69] Sirasa, "News 1st: Prime Time Sinhala News - 7 Pm: (23/11/2021) රාත්‍රී 7.00 ප්‍රධාන ප්‍රවෘත්ති." YouTube, 23 Nov. 2021, www.youtu.be/ruDYyKlETCQ?t=1393.

[70] "Written statement* submitted by Franciscans International, a non-governmental organization in general consultative status." United Nations, 5 Feb. 2024.

[71] Trial monitoring report on 18th of February, 2022 – Case No: HC (TAB) 2900/21 and Case No: HC (TAB) 2899/21

[72] *ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය එදිරිව පූජිත් සේනාධි බණ්ඩාර ජයසුන්දර* HC (TAB) 2900/ 2021 (විත්තිවාචක කැඳවීම පිළිබඳ නියෝගය) 182 ඡේදය and *ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය එදිරිව හේමසිරි ප්‍රනාන්දු* HC (TAB) 2899/2021 (විත්තිවාචක කැඳවීම පිළිබඳ නියෝගය) 173 ඡේදය

[73] *ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය එදිරිව පූජිත් සේනාධි බණ්ඩාර ජයසුන්දර* HC (TAB) 2900/ 2021 (විත්තිවාචක කැඳවීම පිළිබඳ නියෝගය) 18 ඡේදය and *ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය එදිරිව හේමසිරි ප්‍රනාන්දු* HC (TAB) 2899/2021 (විත්තිවාචක කැඳවීම පිළිබඳ නියෝගය) 19 ඡේදය

[74] "SC FR 163/2019." Supreme Court, https://www.supremecourt.lk/images/documents/sc_fr_163_2019.pdf. Accessed 28 Mar. 2024.

